# 59. திருகொடி மாடச் செங்குன்றூர் (திருச்செங்கோடு)

**தலம்:**

நாமக்கல் அருகில் உள்ளது. ஈரோட்டிலிருந்தும் வரலாம். நகரப் பேருந்து வசதி உண்டு.

**தலச்சிறப்பு:**

இயற்கையான பெரியமலை மலை. செங்குத்தானது. செங்குத்தாக உள்ளதால் 'செங்கோடு' ஆயிற்றோ! (கோடு - மலை) மலை செம்மையாக இருத்தலின் செங்கோடானதோ! நாககிரி, நாகமலை, சர்ப்பகிரி என்ற வேறு பெயர்களும் உண்டு. நகரின் மேல்வீதியிலிருந்து பார்த்தால் மலை நாகம் போல் தோன்றுவதால் நாககிரி என்பர். 1200 படிகள். மலை அடிவாரத்திலும் மலைமேல் உள்ளது போல் ஒருசிவன் கோயில் உள்ளது. இங்கிருந்து தான் மலைக்கோவிலுக்கு, தேவஸ்தான பேருந்துகள் செல்கின்றன. இப்பணி அண்மைக் காலத்தில் தோன்றியது. மலைமீது பேருந்து, பிளசர் முதலியன செல்ல கட்டணத்துடன் அனுமதி வழங்கப்படுகிறது. படி வழியாக மலை ஏறுங்கால் ஒருசில இடங்களில் இறங்கி, ஏறும் நிலை உளது. பத்து மண்டபங்களைத் தாண்டி மலைக் கோவிலுக்குள் செல்லலாம். மூன்றாவது உள்ள தயிலி (தைலி) மண்டபத்திற்கு மேற்கே வெண்ணெய்யால் மூழ்கடிக்கப் பெற்றிருக்கும் நந்தியைக் காணலாம். நந்தி மண்டபத்திலிருந்து 60 அடி நீளத்திற்கு அழகிய ஐந்துதலைகளுடன் வேலைப்பாடோடு அமைய செதுக்கப் பட்டுள்ள பாம்பினைக் கண்டு மகிழலாம். ஐந்தாவதான சிங்கத் தூண் மண்டபத்தினைக் கடக்கும் போது செங்குத்தான பாறையின் மேல் ஒரே நிலையில் அமைக்கப் பெற்றுள்ள அறுபது படிகளைக் காண் கின்றோம்.

இப்படிகளின் ஓரங்களின் எண்ணெய் ஊற்றி ஏற்றுதற்கு ஏற்றார் போல் மாடப்பிறைகளும் உள்ளன. இவையே சத்திய வாக்குப் படிகள்! பணம் பெற்று இல்லை என்போர்; வஞ்சக மனங் கொண்ட கயவர்; பொருளாசையால் மனம் மாறுப்பட்டோர், பண ஆசையால் படிற்றொழுக்கம் பூண்டோர், நீராடி, ஈரத்துணியுடன் இப்படிகளில் ஏறிவந்து இறுதியில் அமைந்துள்ள சத்தியநாதனான கந்தன் சந்நிதியில் நெய் விளக்கினை ஏற்றி; எரிகின்ற கற்பூரத்தை அணைக்கவும் மேற்குறித்தோர் அஞ்சுவர். ஆம்! அத்துணை சக்தி கொண்டவை அச்சத்தியப் படிகளும் சத்தியநாதனும். வஞ்சிக்கப்பட்டு அதனால் அல்லலுற்ற ஆற்றாது இடர்ப்படுவோர் அழுத கண்ணீருடன் கூறும் கடுஞ்சொற்கள் - கொடுஞ்



சொற்கள் - அவற்றிற்கு உரியாரைச் சென்றடையும் தன்மை பெற்றவை. வஞ்சிக்கப்பட்டோர், நீதிமன்ற வழக்குகளில் சிக்கித்தவிப்போர் வெற்றி பெற இச்சத்தியப் படிகளில் திருவிளக்கு ஏற்றியும், சிறப்புப் பூசையும் செய்வர். இத்திருக்கோயிலில் இதற்குரிய கட்டணத்தைச் செலுத்திச் செய்யும் சத்திய பிரமாணத்தைத் தமிழகத்தின் உயர்நீதிமன்றமே ஏற்றுக் கொள்கிறதாம்! இச்சத்தியப் படிகளையும், சத்திய நாதனையும் அருணகிரியார் 'தர்க்க சத்ரத் தக்கமார்க்கச் சத்திய வாக்யப் பெருமாளே' (திருச்செங்கோட்டுத் திருப்புகழ் 391) எனப் பாடியுள்ளார். பத்தாம் மண்டபம் தாண்டி திருக்கோயிலினுள் நுழைகின்றோம். வேலைப் பாடுகளுடன் கூடிய அழகிய அற்புத மண்டபம். கற்சங்கிலிகளும் உள. இம்மண்டபம் அருகே செங்கோட்டு வேலவன் சந்நிதி. வேலவன் கிழக்குப் பார்த்துள்ளான். அவன் திருக்கையில் இயற்கையிலேயே வேல் உளது. கந்தரலங்காரத்தில் 5 இடங்களில் செங்கோட்டு வேலனை அருணகிரியார் பலவாறு பாடியுள்ளார். 51 செய்யுட்கள் கொண்ட கந்தரநுபூதியில் 11 ஆம் பாட்டில் மட்டும் 'நாகாசலம்' என்று இத்தலம் ஒன்றினையே சிறப்பித்துள்ளார். வேறு எத்தலமும் அநுபூதியில் குறிக்கப்படவில்லை. அத்துணை உயர்வு கொண்டவன் செங்கோட்டு வேலன். இப்பகுதி வாழ் மக்கள் ஊர்ப்பெயரொடு 'செங்கோட்டு வேலன்' எனத் தம் பெயரை வைத்து மகிழ்வர். இப்பகுதி வாழ் மக்கள் திருமணம் முடிந்ததும் தம்பதிகளை செங்கோட்டு மலைக்கு அழைத்து வாராமல் இரார். முருகனின் நீங்கா இடங்களைக் கூற வந்த சிலம்பாசிரியரான இளங்கோவடிகள் 'சீர்கெழு செந்திலும் செங்கோடும்' என்பர். வேலவனை வணங்கி வரும் போது சிவலிங்கச் சந்நிதி உள்ளது. இச் சந்நிதியையும் தாண்டி உட்சென்றால் மூலவரான அர்த்தநாரீச்சுரர் சந்நிதி. பெருமான் மங்கை பங்கனாகக் காட்சி தருகின்றார். மேற்கு நோக்கிய சந்நிதி.

தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத் தொன்மைன்
கோலமே நோக்கிக் குளிர்ந்துஊ தாய் கோத்தும்பீ

(திருக்கோத்தும்பி 15

என மனமொழிப் பெருமான் பாடியதற்கேற்ப பெருமாள் விளங் கின்றார். ஆறடி உயரத்தில் அற்புதக் கோலமாய் பெருமான் விளங் கின்றான். மங்கை பங்கனின் திருவடிகளுக்குக் கீழே ஒரு நீரூற் என்னே அற்புதம்! கடும்பாறை, நீண்டு உயர்ந்த மலை! அம்மையப்ப அடிகளின் கீழ்நீரூற்று. இதனைத் தேவதீர்த்தம் என்பர். திருஞா

சம்பந்தர் இவ்வூருக்கு வரும்போது மழைக்காலம் நீங்கிப் பனிக்காலம் வர குளிர் அதிகமாயிற்று. அதனால் நஞ்சுடைச் சுரத்தால் பெருமானுடன் வந்த திருக்கூட்டத்தார் வருத்தமுற பிள்ளையாரும் 'அவ்வினைக்கு இவ்வினை' என்ற திருநீலகண்டத் திருப்பதிகம் பாடியருளி அடியார்களின் அல்லலை அகற்றினார். இப்பதிகம் தவிர பிள்ளையார் பாடிய பதிகமும் ஒன்று உண்டு . இக்கோவிலில் ஆதிகேசவப் பெருமாள் சந்நிதியும் உண்டு.

பதிகவரலாறு:

திரு ஈங்கோய்மலைப் பெருமானைப் பணிந்து போற்றித் தண்ணார்த் தமிழ்த் திருப்பதிகம் பாடிய பின்னர் சண்பகச் செல்வர் கொடிமாடச் செங்குன்றுரை அடைந்தார். அடியார் பெருமக்கள் தெருவெல்லாம் மகரதோரணம் அமைத்தும் நகரை நன்கு அணி பெறவும் செய்தனர். அடியவர்கள் எழுப்பிய சிவ அர ஒலி விண்ணினை முட்டியது. அடியார் பெருமக்களின் வரவேற்பினை மனமுவந்து ஏற்ற காழிப் பெருமான் திருக்கோயிலை நண்ணி,

'செங்குன்றூர் நின்ற
அந்தண னைத் தொழுவார் அவலம்
அறுப்பாரே'

எனப்பதிகம் பாடுகின்றார்.

திருமுறை 1- 107 பண்: வியாழக்குறிஞ்சி பெரியபுராணம். 326

| | | |
|---|---|---|
| இறைவன் | : | அர்த்தநாரீச்சுவரர் |
| இறைவி | : | அர்த்தநாரீச்சுவரி |
| தீர்த்தம் | : | பிரமதீர்த்தம். |
| தலவிருட்சம் | : | இலுப்பை மரம் |

திருச்சிற்றம்பலம்.

வெந்தவெண் ணீறணிந்து விரிநூல்
திகழ்மார்பில் நல்ல
பந்தண வும்விரலாள் ஒருபாகம்
அமர்ந்தருளிக்
கொந்தண வும்பொழில்சூழ் கொடி மாடச்
செங்குன்றூர் நின்ற
அந்தண னைத் தொழுவார் அவலம்
அறுப்பாரே 1049



பொ.ரை

பரந்து விரிந்த மார்பில் திருநீற்றோடு பூணூல் விளங்குகின்றது. உமையை ஒருபாகமாக் கொண்டு அருள் செய்து கொத்தாக விளங்கும் பொழில் சூழ் கொடிமாடச் செங்குன்றூரில் உறையும் பெருமானைத் தொழுபவர்கள் துன்பம் அற்று இருப்பார்கள்.

2. அலைமலி தண்புனலோடு அரவம்
சடைக்கு அணிந்து ஆகம்
மலைமகள் கூறுடையான் மலைஆர்
இளவாழைக்
குலைமலி தண்பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் நின்ற
தலைமக னைத் தொழுவர் தடுமாற்று
அறுப்பாரே 1050

பொ.ரை

கங்கையையும் அரவினையும் சடையில் கொண்டு, உமையைத் தம் உடம்பில் கூறாகப் பெற்று, மலையில் விளங்கும் வாழைக் குலைகள் கூடிய பொழில்கள் சூழ்ந்த கொடிமாடச் செங்குன்றூர் உறையும் பெருமானைத் தொழுபவர்கள் மனக்கலக்கம் அற்றவர்களாவார்கள்.

3. பாலன நீறுபுனை திகழ்மார்பில்
பல்வளைக்கை நல்ல
ஏல மலர்க்குழலாள் ஒருபாகம்
அமர்ந்தருளிக்
கோல மலர்ப்பொழில் சூழ்கொடிமாடச்
செங்குன்றூர் மல்கும்
நீலநன் மாமிடற்றான் கழலேத்தல்
நீதியே 1051

பொ.ரை

பால்போலும் வெண்மையான திருநீறு அணிந்து, அழகிய நல்மார்பில் உமையை ஒரு பாகமாகக் கொண்டும், பேரெழில் கொண்ட பொழில்கள் சூழ்ந்த கொடி மாடச் செங்குன்றூரில் விளங்கும் நீலகண்டனான இறைவனை வணங்குவதே கடமையாம்.

நிறைந்த திருச்சோற்றுத்துறையுள் எழுந்தருளியுள்ள இளம்பிறையைத் தலையில் தரித்த முதல்வனின் திருவடியைக் குறித்துச் சொன்ன இப்பாடல்களைக் கற்றவர் துன்புறார். (என்றும் இன்புறுவர்)

திருச்சிற்றம்பலம்

அலகு – 2

(அ)

# 22. திருமழபாடி தேவாரம்

## தலம்

திருச்சி, தஞ்சாவூர் நகரங்களிலிருந்து பேருந்து வசதி உண்டு கொள்ளிடக் கரையில் அமைந்துள்ள கோயில்.

## தலச் சிறப்பு

பிரம்மலோகத்திலிருந்த சிவலிங்கத்தை ஆண் விலங்கு ஒன்று கொணர்ந்து பிரதிஷ்டை செய்யப் பிரமதேவர் அதைப் பெயர்த்தெடுக்க முடியாமற்போக, இர்- வஜ்ரஸ்தம்பமூர்த்தி என்றனர். (நந்தியம் பெருமான் சுயசாதேவியைத் திருமணம் செய்த தலம்) பங்குனித் திங்களில் நிகழும் நந்திதேவர் திருமணம் சிறப்புடையது. திருமாலும் இந்திரனும் பூசித்த தலம். திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடியுள்ளனர். இத்திருக்கோயிலுள்ள தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் கண்டு இன்புறத்தக்கது.

## பதிக வரலாறு

திருச்சோற்றுத்துறையானை வணங்கிப் பதிகம் பாடிய சுந்தரர், திருக்கண்டியூர், திருவையாறு, திருப்பூந்துருத்தி, திருவாலம்பொழில் வந்து இறைவனை வணங்கி உறங்கும்பொழுது பெருமனார் சுந்தரர் கனவில் தோன்றி 'மழபாடியினில் வருவதற்கு நினைக்க மறந்தாயோ'.(எ.க. 471-72) என வினவத், தம்பிரான்தோழரும் பொழுது புலர்ந்தபின் திருமழபாடி சென்று மழபாடி ஈசனைக் கண்டு வணங்கித் திருப்பதிகம் பாடத் தொடங்கினார்.

| | | |
|---|---|---|
| இறைவன் | : | வச்சிரத்தம்பநாதர் |
| இறைவி | : | அழகம்மை |
| பண் | : | நட்டராகம் |
| தீர்த்தம் | : | கொள்ளிடம் |
| தலவிருட்சம் | : | பனை மரம் |

திருச்சிற்றம்பலம்

8. மத்த நன் மாமலரும் மதியும் வளர்
கொன்றையுடன் துன்று
தொத்தலர் செஞ்சடை மேல் துதைய
உடன்சூடிக்
கொத்தலர் தண்பொழில் சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் மேய
தத்துவ னைத்தொழுவார் தடுமாற்று
அறுப்பாரே

பொ.ரை 1056

ஊமத்தம் பூவும், மதியும், கொன்றை மலரும், தண்பொழில் சூழ் கொடிமாடச் செங்குன்றூரில் விளங்கும் மெய்ப்பொருளாகிய இறைவனைப் போற்றி வணங்குபவர்கள் மனத்தடுமாற்றம் அற்ற வராவர்.

9. செம்பொனின் மேனியனாம் பிரமன் திரு
மாலும் தேட நின்ற
அம்பவளத் திரள்போல் ஒளியாய
ஆதிபிரான்
கொம்புஅண வும்பொழில் சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் மேய
நம்பன தாள்தொழுவார் வினையாய
நாசமே

1057

பொ.ரை

செம்பொன்மேனியன்; நான்முகனும் திருமாலும் தேடுமாறு சென்றும் காண இயலாதவனாய் அழகிய செம்மையான பவளத்திரள் அன்ன ஒளிகொண்ட ஆதிப்பிரான், பொழில் சூழ் கொடிமாடச் செங்குன்றூரில் எழுந்தருளிய பெருமானின் திருவடிகளை ஏத்திப் போற்றுவார்க்கு வினையானது மாயும்.

நம்பன் - சிவன்.

10. போதியர் பிண்டியர் என்று இவர்கள்
புறங்கூறும் பொய்ந்நூல்
ஓதிய கட்டுரை கேட்டு உழல்வீர்
வரிக்குயில்கள்



கோதிய தண்பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் நின்ற
வேதிய னைத் தொழநும் வினையான
வீடுமே 1058

பொ.ரை

புத்தர், சமணர் ஆகியோர் கட்டிக் கூறும் பொய்யுரைகளைக் கேட்டு உழலும் மானிடரே! வரிக்குயில்கள் மூக்காற்கோதியுண்ட தண்பொழில் சூழ் கொடிமாடச் செங்குன்றூரில் நிலவி நின்று மேவும் மறை முதல்வனான பெருமானை வணங்கிப் போற்றிட வினையாவும் கெட்டொழியும்.

வேதியன் - சிவன். 'சொற்றுனைவேதியன்' அப்பர்.

11. அலைமலி தண்புனல் சூழ்ந்து அழகார்
புகலிந் நகர் பேணும்
தலைமக னாகி நின்ற தமிழ்ஞான
சம்பந்தன்
கொலைமலி மூவிலையான் கொடிமாடச்
செங்குன்றூர் ஏத்தும்
நலமலி பாடல்வல்லார் வினையான
நாசமே 1059

பொ.ரை

நீர்வளம் மிகுதியாகக் கொண்ட அழகான புகலிநகர் தலமகனான தமிழ்ஞான சம்பந்தன் சூலம் கொண்ட பெருமான் விளங்கும் கொடிமாடச் செங்குன்றூரைப் போற்றிப்பாடிய நலம் மிகு இத் திருப்பதிகத்தைப் பாட வல்லாரின் வினை கெட்டழியும்.

திருச்சிற்றம்பலம்.

4. வாருறு கொங்கை நல்லமடவாள்
திகழ்மார்பில் நண்ணும்
காருறு கொன்றையொடும் கதநாகம்
பூண்ட ருளிச்
சீருறும் அந்தணர்வாழ் கொடிமாடச்
செங்குன்றூர் நின்ற
நீருறு செஞ்சடையான் கழல்ஏத்தல்
நீதியே 1052

பொ.ரை

கச்சால் கட்டப்பட்டு நல்ல கொங்கைகளையுடைய இளமையான உமை மார்பில் திகழவும்; நண்ணும் கார்காலத்தில் சிறந்து விளங்கும் கொன்றை மலரையும், சினங்கொண்ட அரவையும் அணிந்து புகழ் மிகுந்த மறையோர் வாழும் கொடிமாடச் செங்குன்றூரில் நின்று, கங்கை கொண்ட செஞ்சடைத் தலைவனாகிய பிரானின் திருவடியை வணங் குதலே கடமையாகும்.

5. பொன்திகழ் ஆமையொடு புரிநூல்
திகழ் மார்பில் நல்ல
பன்றியின் கொம்பணிந்து பணைத்தோளியோர்
பாகமாகக்
குன்றன மாளிகைசூழ் கொடிமாடச்
செங்குன் றூர் வானில்
மின்திகழ் செஞ்சடையான் கழல் ஏத்தல்
மெய்ப் பொருளே 1053

பொ.ரை

பொன்போல் திகழும் ஆமையோட்டுடன், முப்புரிநூலும் மார்பில் திகழ்வதோடு நல்ல பன்றியின் கொம்பையும் அணிந்து, மூங்கில் போன்ற மென்மையான தோள்கள் கொண்ட உமையைப் பாகமாகக் கொண்டு குன்று போல் வலிமையும் உயர்ச்சியும் கொண்ட மாளிகைகள் சூழப்பெற்ற கொடி மாடச் செங்குன்றூரில், விண்ணில் தோன்றும் மின்னலைப் போல் சிவந்தசடை கொண்ட பெருமானின் திருவடியைப் போற்றி வணங்கலே உண்மையான ஞானம் ஆகும்.

6. ஓங்கிய மூவிலைநற்சூலம்
ஒருகையன் சென்னி
தாங்கிய கங்கையொடு மதியம்
சடைக்கு அணிந்து
கோங்கு அணவும் பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் வாய்ந்த
பாங்கனதாள் தொழுவார் வினையாய
பற்றறுமே. 1054

பொ.ரை

வெற்றியோடு நல்லருளும் பெருகிடச் செய்யும் மூவிலை வேல் நற்சூலம் ஒரு கரத்தில் விளங்கவும், கங்கையையும் சடையையும் சடையில் கொண்டு, தேன் விளங்கும் பொழில் சூழ் கொடிமாடச் செங்குன்றூரில் மேவிய பெருமானின் அருளான திருவடிகளைத் தொழுபவர்களுக்குப் பற்றிய வினைகள் விரைவில் விலகிச் செல்லும்.

7. நீடலர் கொன்றையொடு நிமிர்புன்
சடைதாழ வெள்ளை
வாடல் உடைதலையில் பலி கொள்ளும்
வாழ்க்கையனாய்க்
கோடல் வளம்புறவிற் கொடிமாடச்
செங்குன்றூர் நின்ற
சேடன தாள் தொழுவார் வினையாய
தேயுமே 1055

பொ.ரை

நீண்டு மலரும் கொன்றையுடன் சடைமுடியானது தாழ்ந்து நீண்டு விளங்கிட, பிரமகபாலம் கொண்டு பிச்சை யேற்கும் வாழ்க்கைக் கொண்ட வனாய், கோடல் எனும் மலர்கள் விளங்கும் செங்குன்றூரில் நின்று அருள் பாலிக்கும் இறைவன் திருவடிகளை வணங்குவார்களுக்கு வினை நீங்கும்.

வெள்ளை வாடல் உடை தலை - பிரமகபாலம். கோடல் - மலரில் ஒருவகை.

1. பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே. 226

(பொ-ரை) பொன்போலும் திருமேனியனே! புலித்தோலை திருவரையிற் கட்டி மின்னுதலையுடைய சிவந்த சடையின்கண் விளங்குகின்ற கொன்றைமாமணியே! திருமழபாடியுள் எழுந்தருளியிருக்கின்ற மாணிக்கமே! தாயே! உன்னையல்லாமல் இனிவேறு யாரையும் நினையேன்.

2. கீளார் கோவணமும் திருநீறுமெய் பூசி உன்தன்
தாளே வந்தடைந்தேன் தலைவாஎனை ஏன்றுகொள் நீ
வாளார் கண்ணிபங்கா மழபாடியுள் மாணிக்கமே
கேளா நின்னையல்லால் இனியாரை நினைக்கேன. 227

(பொ-ரை) கீளொடு கூடின கோவணத்துடன் மெய்யில் திருநீற்றினைப் பூசியவனே! அனைவருக்கும் தலைவனே! வாள்போன்ற கண்களையுடைய உமைபங்கனே! மழபாடியில் எழுந்தருளியுள்ள மாணிக்கமே! அடியவனான யான் நின் திருவடிகளைப் பற்றுக்கோடாகக் கொண்டு வந்தடைந்தேன். எனக்கு உறவாய் உன்னையல்லாது இனி வேறு யாரை நினைப்பேன். என்னை ஏற்றுக்கொள்.

(கு-ரை) கீள்-கிழிக்கப்பட்ட.

3. எம்மான் எம்அனையென்று எனக்கு எள்தனைச் சார்வாகார்
இம்மா யப்பிறவி பிறந்தே இறந்தே எய்த்தொழிந்தேன்
மைம்மான் பூம்பெழில்சூழ் மழபடியான் மாணிக்கமே
அம்மான் நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே. 228

(பொ-ரை) மேகங்கள் தவழ்கின்ற பெரிய பூஞ்சோலைகள் சூழ்ந்துள்ள திருமழபாடியுள்ள மாணிக்கமே! எம் தலைவனே! 'என் தந்தை, என் தாய்' ஆகிய இவர்கள் எனக்கு எள்ளளவும் ஆதரவாக மாட்டார். இம்மாயப் பிறப்பில் பிறந்தும் இறந்தும் சலித்தேன். (இனி பிறவாமை வேண்டும்) அதற்கு உன்னையன்றி வெறு ஒருவரையும் நினைக்க மாட்டேன்.

(கு-ரை) பிறவி எடுத்து எடுத்து இளைத்தல். அதனால் சலித்தல்.

4. பண்டே நின்னடியேன் அடியாரடி யார்கட்கு எல்லாம்
தொண்டே பூண்டொழிந்தேன் தொடராமைத் துரிசறுத்தேன்
வண்டார் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
அண்டா நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே. 229

(பொ-ரை) வண்டுகள் நிறைந்த பூஞ்சோலைகள் சூழ்ந்த திருமழபாடி மாணிக்கமே! விண்ணுலகத் தலைவனே! பண்டே உன் அடியவன்ான இவ்வடியான் பிற அடியார் அனைவருக்கும் அடிமைப்பணியே செய்து வந்தேன்! அப்பணியில் குற்றம் வராமலும் காத்துக்கொண்டேன் ஆதலால் உன்னையன்றி இனியாரை நினைப்பேன்.

5. கண்ணாய் ஏழுலகும் கருத்தாய அருத்தமுமாய்ப்
பண்ணார் இன்தமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே
மண்ணார் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
அண்ணா நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே. 230

(பொ-ரை) ஏழுலகத்தில் வாழும் அனைத்திற்கும் கண்ணாய், கருத்தாய், பொருளாய், பண்களோடு இருந்த இனிய தமிழ்ப்பாடல்களாய் அதனினும் மேலாக விளங்கும் பரஞ்சுடரே! மண்ணின்கண் நிறைந்த பூஞ்சோலைகள் சூழப்பெற்ற திருமழபாடி மாணிக்கமே! மூத்தவனே! உன்னையல்லால் இனி வேறு யாரை நினைப்பேன்!

நாளார் வந்தணுகி நலியாமுனம் நின்தனக்கே
ஆளா வந்தடைந்தேன் அடியேனையும் ஏன்றுகொள் நீ
மாளா நாளருளும் மழபாடியுள் மாணிக்கமே
அளா நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே. 231

(பொ-ரை) கூற்றுவன் என் இறுதிநாளில் வந்து உயிரை எடுத்துச் செல்லும் முன்னேயே உனக்கே அடியவனாகி உன்னிடம் வந்து அடைந்தேன். அடியவனான என்னை நீர் ஏற்றருளவேண்டும். முடிவற்ற வாழ்நாளை அருளிச்செய்யும் திருமழபாடி மாணிக்கமே உன்னையல்லால் இனி யாரை நினைப்பேன்.

சந்தா ருங்குழையாய் சடைமேற்பிறை தாங்கி நல்ல
வெந்தார் வெண்பொடியாய் விடையேறிய வித்தகனே
மைந்தார் சோலைகள்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
எந்தாய் நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே. 232

(பொ-ரை) அழகு நிறைந்த குண்டலத்தை அணிந்தோனே! சடைமீது பிறையை அணிந்தவனே! நன்கு வெந்த வெண்மையான திருநீற்றினைப் பூசியவனே! விடை ஏறும் வித்தகனே! வலிமை பொருந்திய மரங்களால் சூழப்பெற்ற சோலைகளைக் கொண்ட திருமழபாடி மாணிக்கமே! உன்னையன்றி இனி யாரை நினைப்பேன்.

வெய்ய விரிசுடரோன் மிகுதேவர் கணங்களெல்லாம்
செய்ய மலர்கள்இட மிகு செம்மையுள் நின்றவனே
மையார் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
ஐயா நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே. 233

(பொ-ரை) வெம்மை மிகுந்த விரி கதிர்களைக் கொண்ட சூரியனும் ஏனை தேவர் கூட்டங்களும் அழகிய மலர்களால் மலர்வழிபாடு ஆற்ற, அதனை ஏற் செம்மை செய்தவனே! என் தலைவனே! கருமேகங்கள் சூழும் பூஞ்சோலை வா திருமழபாடி மாணிக்கமே! இனி உன்னையல்லால் யாலை நினைப்பேன்!

9. நெறியே நின்மலனே நெடுமால் அயன் போற்றி செய்யும்
குறியே நீர்மையனே கொடியேரிடை யாள்தலைவா
மறிசேர் அங்கையனே மழபாடியுள் மாணிக்கமே 2
அறிவே நின்னையல்லால் இனியாரை நினைக்கேன்.

(பொ-ரை) நன்நெறியளனே! மலத்தாற் பற்றப்படாதவனே! திருமாலும், நான்முகனும் போற்றி வணங்குகின்ற முதற்பொருளே! பெருமையானவனே! கொடிபோல் இடைகொண்ட உமையின் கணவனே! அழகிய கையில் மானை ஏந்தியவனே! திருமழபாடி மாணிக்கமே! அறிவுருவானவனே! இனி உன்னையல்லால் யாரை நினைப்பேன்!

10. ஏரார் முப்புரமும் எரியச்சிலை தொட்டவனை
வாரார் கொங்கையுடன் மழபாடியுள் மேயவனைச்
சீரார் நாவலர்கோன் ஆரூரன் உரைத்ததமிழ்
பாரோர் ஏத்தவல்லார் பரலோகத்து இருப்பாரே. 235

(பொ-ரை) அழகான முப்புரமும் எரியுண்ண வில்வளைத்தவனும், கச்சால் கட்டப்பட்ட நகில்களைக் கொண்ட உமையுடன், திருமழபாடியில் உறைபவனை சீரார் நாவலர்கோனான நம்பியாரூரன் பாடிய தமிழ்ப் பாடல்களை உலகத்தவர் போற்றிப் படித்தால் சிவலோகத்தில் வாழப்பெறுவார்.

திருச்சிற்றம்பலம்

# 23. திருவானைக்கா

## தலம்

திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே 2. கி.மீ. தொலைவிலுள்ளது. திருச்சி நகரிலிருந்து நகரப்பேருந்து வசதி உண்டு.

## தலச் சிறப்பு

யானை பூசித்தப் பேறு பெற்ற காரணத்தால் ஆனைக்கா எனவும், இறைவன் வெள்ளை நாவல் மரத்தடியில் எழுந்தருளி இருப்பதால் 'ஜம்புகேஸ்வரம்' என்றும் (ஜம்பு நாவல் - வெள்ளை நாவல்) பெயர் பெறலாயிற்று பஞ்ச பூதங்களில் இஃது அப்புத்தலம் (அப்பு-தண்ணீர்) இறைவன் வீற்றுள்ள கருவறையாம் இலிங்க மூலத்தில் நீருறுவதை இன்றும் காணலாம் இச்சிறப்பால் 'செழுநீர்த்திரளைச் சென்றாடினேனே' என்றார் அப்பர் பெருமான். முற்பிறப்பில் சிலந்தியாய் இருந்து ஆனைக்கா அண்ணலை வழிபட்ட காரணத்தால் பிற்காலத்தில் கோச்செங்கட் சோழனாய்ப்பிறந்து ஆலயத்தைக் கட்டிய பெருமையுடையது. ஐந்தாம் பிரகாரமான வீபூதி பிரகாரத்திலுள்ள மதிலை 'திருநீற்றான் மதில்' என்பர். இம்மதிலைக்கட்டி முடித்தவுடன் வேலை செய்தோர்க்குச் சித்தராய் வந்த சிவபெருமான் திருநீற்றினைக் கொடுக்க அவர்களும் அதனைப் பெற்று, கையைத் திறந்து பார்க்குங்கால் பொன்னாக மாறிய அதிசயத்தைப்பெற்ற இடம். இத்திருக்கோயிலில் நிகழும் பஞ்சப்பிரகார விழா (பங்குனி, சித்திரை நட்சத்திரத்தில்) சிறப்புடையது. இறைவனை அம்மன் பூசித்த பண்டை வழக்கினை இன்றும் உச்சிக்கால பூசையில் பண்டிதர் ஐயன் சந்நிதியிலிருந்து அம்மன் சந்நிதிக்கு வந்து பூசை செய்தபின், காராம்பசுவிற்குப் பூசையையும் செய்வர். இந்நிகழ்ச்சி காணவேண்டிய ஒன்று சமயக்குரவர் நால்வரும், கவி காளமேகமும், மகாவித்துகான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களும் இத்தலத்தைப் போற்றிப் பாடியுள்ளார்கள்.

## பதிக வரலாறு

நம்பியாரூரர் திருமாழபாடி மாணிக்கத்தைக் கண்டு வணங்கிப் பதிகம் பாடிய பின்னர் திருவனைக்கா வந்தார். இத்திருப்பதிகத்தில் 7-ஆம் திருப்பாடலில் வேறு யாரும் கூறாத ஒரு வரலாற்றினைப் பாடியுள்ளார். 'அடியாரிடத்து அன்பு கொண்டவர் அனைவரிடமும் அன்பு கொண்டவரே' என இப்பதிகத்தில் கூறுவதைக் காண்க. இவ்வருமையறிந்தே தெய்வச் சேக்கிழார் 'நிறையுங்காதலுடன் எடுத்த' (ஏ.கோ. 75) எனக் கூறி மகிழ்ந்தார்.

இறைவன் : ஜம்புகேசுவரர்
இறைவி : அகிலாண்ட நாயகி
பண் : காந்தாரம்
தீர்த்தம் : காவிரி
தலவிருட்சம் : வெள்ளை நாவல் மரம்

திருச்சிற்றம்பலம்

1. மறைகள் ஆயின நான்கும்
மற்றுள பொருள்களும் எல்லாத்
துறையும் தோத்திரத் திறையும்
தொன்மையும் நன்மையும்ஆய
அறையும் பூம்புனல் ஆனைக்
காவுடை ஆதியை நாளும்
இறைவன் என்றடி சேர்வார்
எம்மையும் ஆளுடை யாரே 236

(பொ-ரை) மறை நான்கினையும் அம்மறைப்பொருள்களை விளக்க அதன்பின்னே எழுந்த உபநிடத ஆகமப்பனுவல்களும், இவற்றின் அனைத்து நிலைகளையும் விரித்துப் பேச எழுந்ததும்இசைக்கு அழகியதும், ஆழ்ந்த நுண்பொருள்கொண்ட தோத்திரப் பாடல்களும், பண்டு தொட்டு நன்மையாய் விளங்கும் வீடு பேற்றினை அளிப்பதையே விதந்தோதும். புதிய நீர்ப்பெருக்கினையுடைய ஆனைக்கா முதல்வனை நாடோறும் இறைவன் என்று அறிந்து அடிசேர்பவர் எம்மையும் அடிமையாகக் கொண்டவரே யாவர்.

2. வங்கம் மேவிய வேலை
நஞ்செழ வஞ்சர்கள் கூடித்
தங்கள் மேல்அட ராமை
உண்ணென உண்டிருள் கண்டன்
அங்கம் ஓதிய ஆனைக்
காவுடை ஆதியை நாளும்
எங்கள் ஈசனென் பார்கள்
எம்மையும் ஆளுடை யாரே.

தில்லையில் அருளிய

# 51. அச்சோப் பதிகம்

## அனுபவ வழி அறியாமை

### கலி விருத்தம்

திருச்சிற்றம்பலம்

1. முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

**உரை:** வீடடையும் வழியினை யறியாத முரண்பட்டவரோடு சேர்ந்து, அவர் நெறி நிற்க முயல்கின்ற எனக்கு அன்பு நெறியை யறிவுறுத்தித் தொல்லை வினைகளற்றொழியும் வண்ணம் மன மாசினை நீக்கிச் சிவமயமாக்கி என்னையாட் கொண்டருளிய அப்பன் எனக்கு அருள் செய்த முறையை வேறு யார் பெற வல்லார்? இஃதே அதிசயமே.

2. நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்(கு)
அறியும் வண்ணம் அருளியவா றார்பெறுவார் அச்சோவே.

**உரை:** நன்னெறி யல்லாத வழியை நன்னெறியாக நினையு மியல்புடையேன் கீழ்ப்பட்ட நெறிகளை யடையாது திருவருளினையே கைகூடும்படி, (பெயர் வடிவு முதலிய) அடையாளங்கள் யாவும் இல்லாத திருநடப் பெருமான் தனது திருவருட் கூத்தினை அறியும்படி அடியேனுக்கு அருள் செய்தவாறு வேறு யார் பெற வல்லவர்? இஃதே அதிசயமே.

3. பொய்யெல்லாம் மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையலிடங் கொண்டபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஐயன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.



**உரை:** நிலையானவற்றை நிலையின வென்றெண்ணி, நெருங்கிய நகிலையுடைய பெண்டிரது அனுபவத்தின்கண் மயக்கமுறுதற்குரிய என்னை (அதனிடை) மாண்டு போகாமல் தடுத்தருள் செய்து, பெண்ணை இடப்பாகங் கொண்ட பெருமானாகிய தலைவன், தன்னுடைய திருவடியையே அடையும் வண்ணம் எனக்கருள் செய்தபடி வேறு யார் பெற வல்லவர்? இஃதே அதிசயமே.

4. மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடவேனை
எண்ணமிலா அன்பருளி எனையாண்டிட் டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீ றணிவித்துத் தூநெறியே சேரும்வண்ணம்
அண்ணல்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

**உரை:** மண்ணுலகிற் பிறந்திளைத்துச் செத்து வீழ்தற்குரியேனை, நினைப்பதற்கரிய அன்பினைக் கொடுத்து ஆட்கொண்டு, அடியேனையுந் தனது திருவெண்ணீற்றுப் பொடியை அணியச் செய்து, புனிதமான உயர் நெறியையே அடையும்படி, பெருமான் எனக்கருளிய முறையை வேறு யார் பெற வல்லார்? இஃதே அதிசயமே.

குறிப்பு: எண்ணமிலா - மனத்தால் எதிர்பாராத என்றுரைப்பர். சுண்ணம் - பொடி.

5. பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நஞ்சாய துயர்கூர நிற்பேன்உன் அருள்பெற்றேன்
உய்ஞ்சேன்நான் உடையானே அடியேனை வருகஎன்(று)
அஞ்சேல்என் றருளியவா றார்பெறுவார் அச்சோவே.

**உரை:** பஞ்சு போன்ற பாதமுடைய மாதர் கடைக்கண் பார்வையால் இடைஞ்சற்பட்டு, நெஞ்சிலே உண்டாகிய துயர் மிகும்படி நிற்குமியல்புடையேன் உனது திருவருளைப் பெற்றேன். நான் உய்ந்தேன். என்னை உடையேனை, அடியேனை 'நீ வா, பயப்படாதே' என்று அருள் செய்த முறை வேறு யார் பெற வல்லார்? இஃதே அதிசயமே.

6. வெந்துவிழும் உடற்பிறவி மெய்என்று வினைபெருக்கிக்
கொந்துகுழற் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்

(இனன் – ஒப்புமை; எனன் உயிர் – என் நல்லுயிர்; பரமாத்மா மிகுநர் – மேம்பட்டவர், மேலானவர்.)

**2084.** இலனது வுடையனி தெனநினை வரியவன் *
நிலனிடை விசும்பிடை உருவினன் அருவினன் *
புலனொடு புலனலன் ஒழிவிலன் பரந்த * அந்
நலனுடை யொருவனை நணுகினம் நாமே. (3)

**தெளிவுரை**

பரமாத்மாவானவர், ஒருபொருளைப் பொாகவர் எனவும், ஒரு பொருளைப் பெற்று விளங்குபவர் எனக் கூறப் பெறாதவரும் எல்லாப் பொருளிலும் கலந்து விளங்கியும் பற்றின்றியும் வியாபித்துள்ளவர் ; நினைக்கும் நினைவுக்கும் அரியவர் ; நிலவுலகத்திலும், ஆகாயத்திலும் வடிவம் கொள்ளும் வகையிலும், வடிவத்திற்கு அப்பாற்பட்ட அருவப் பொருளாகவும் விளங்குபவர் ; புலன்களால் அறியப்படுமாறு தோன்றினாலும் அப்புலன்களுடன் கலவாது விளங்குபவர் ; எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்துள்ளவர். அத்தகைய அருங்குணச் சிறப்புடைய பரமனுடன் நாம் சேரப் பெற்றோம்.

பரமாத்மாவின்பால் மருவிய ஆழ்வாரின் அனுபவமான பேரின்ப நிலையானது, "நணுகினம் நாமே" என உணர்த்தப் பெற்றது. மற்றும், புலன்களின் சிறுமையில் கலவாத பரம்பொருளின் மேன்மையானது, "புலனொடு புலனலன்" என ஏத்தப் பெற்றது.

(நலனுடை ஒருவன் – பரமாத்மா, நாராயணன்.)

**2085.** நாமவன் இவன் உவன் அவள் இவள் உவள் எவள் *
தாமவர் இவர் உவர் அது இது உது எது*
வீமவை இவை உவை அவை நலம் தீங்கவை*
ஆமவை ஆயவை ஆய் நின்ற அவரே. (4)

**தெளிவுரை**

பரமாத்மாவானவர், நாம் என்னும் பன்மையாகவும், இவன், நீ, அவள், இவள், என்னும் சுட்டுப் பெயர்களாகவும் மற்றும், தாம், அவர், இவர், நீவிர், அது, இது, இவை, அவை எனப்படும் குறியீடுகளாகவும், நல்லவை, தீயவை, சென்ற காலம், நிகழ் காலம், எதிர் காலம் எனமேவும் யாவுமாகவும் விளங்குபவர்.

(உவன் – முன்னிலை, நீ, நீவிர்.)

**2086.** அவரவர் தமதம தறிவறி வகை வகை *
அவரவர் இறையவர் எனஅடி யடைவர்கள் *
அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர் *
அவரவர் விதி வழி யடைய நின் றனரே. (5)

**தெளிவுரை**

உலகில் உள்ள மாந்தர்கள், அவரவர்களுடைய அறிவுக் கேற்ற அளவில் அறிந்து, தெய்வம் ஒன்றை வழிபட்டு வணங்குவார்கள். ஆயினும் அவ்வாறு வணங்கும் பக்தர்கள் குறைவின்றி நன்மைகளை நன்கு பெறுபவராவர். இதற்குக் காரணமாக இருப்பது ஸ்ரீமன் நாராயணனே முன்னின்று அந்தந்த தெய்வத்தின் பால் கலந்து மேவி அருள் பாலிப்பதே யாகும்.



**2087.** நின்றனர் இருந்தனர் கிடந்தனர் திரிந்தனர் *
நின்றிலர் இருந்திலர் கிடந்திலர் திரிந்திலர் *
என்றுமோர் இயல்வினர் என நினை வரியவர் *
என்றுமோர் இயல் வொடு நின்ற எம் திடரே. (6)

**தெளிவுரை**

பரம்பொருளானவர், நிற்றல், இருத்தல், கிடத்தல், திரிதல் என செயலுக்கு உரியவராகவும், அவ்வாறு மேவும் தன்மைக்கு அல்லர் என இயம்பும் தன்மையில் திகழ்பவர். அப்பரம்பொருள் திடமாக எம் மேவுபவரே.

**2088.** திடவிசும் பெரிவளி நீர்நிலம் இவை மிசை *
படர் பொருள் முழுவதும் ஆயவை யவை தொறும் *
உடல் மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன் *
சுடர் மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே. (7)

**தெளிவுரை**

உறுதி மிக்கதாக விளங்கும் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாய எல்லாவற்றுள்ளும் கலந்தும், மற்றும் உள்ள யாவற்றிலும் முழுமை தோன்றுமாறு புரிந்தும், உடலின் கண் பொருந்திச் செயல் மேவும் உ போன்று வியாபித்தும், கண்ணுக்குப் புலனாகாதபடி மறைந்து விளங் திகழும் வேதத்தில் பொலிந்தும் உள்ளவரான அப்பரம் பொருளானவர், உ காலத்தில் யாவற்றையும் திருவயிற்றிலே அடக்கி ஆலி விளங்குபவராவர்.

(உண்ட சுரன் – உட் கொண்டு வயிற்றில் அடக்கிப் பாதுகாத்தலைப் கடவுள்.)

**2089.** சுரர் அறி வருநிலை விண்முதல் முழுவதும் *
வரன் முத லாயவை முழுதுண்ட பரபரன்*
புரமொரு மூன்றெரித் தமரர்க்கும் அறிவியந்து *
அரன் அயன் என உல கழித்தமைத் துளனே. (8)

**தெளிவுரை**

பரம் பொருளானவர், தேவர்களும் அறிதற்கு அரியவராகவும், ஆ முதலான யாவற்றையும் படைத்தவராகவும், அவற்றைப் பிரளய கா உட்கொண்டு தனது வயிற்றிலே ஏற்றுப் பாதுகாப்பவராகவும் விளங் அவர், முப்புரங்களை எரித்துச் சாம்பலாக்கியும் உலகங்களை அ செய்தும் மேவும் அரனாகவும், தேவர்களும் நல்லறிவைத் தரு உலகங்களைப் படைப்பவரும் ஆகிய நான்முகக் கடவுளாகவும் விளங்

(அறிவரு நிலை – அறிதற்கு அரிய நிலை ; பரபரன் – பரம்பொருள், நாரா அயன் – நான்முகன்.)

புரமொரு மூன்றெரித்து, முப்புரம் எரித்த வரலாறு இவண் ஓதப் மற்றும் திருப்பாசுரம் வ.எண் 2626 காண்க.

**2090.** உளன் எனில் உளன் அவன் உருவம் இவ் வுருவகள்*
உளன் அலன் எனில் அவன் அருவம் இவ் வுருவுகள்*
உளன்என இலன்என இவை குணம் உடைமையில் *
உளன்இரு தகைமையொடு ஒழிவிலன் பரந்தே. (9

...வன் – புகழ் – அடியவர்களுக்கு வரையாது வழங்கும் அரங்கனின் அருட் ...ணத்தை ஓதுதலாம்.)

*மிக்க இறை நிலையும் மெய்யாம் உயிர் நிலையும்**
*தக்க நெறியும் தடையாகித் . தொக்கியலும்**
*ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும்* குருகையர் கோன்*
*யாழினிசை வேதத்தியல்.*

**தெளிவுரை**

யாழின் இசை போன்று இனிமையுடன் திகழ அருளிச் செய்யப் பெற்ற திருவாய்மொழியானது, அளவிடுவதற்கு அரிய பரமாத்மாவின் தன்மையையும், மெய்யாகிய ஜீவாத்மாவின் தன்மையையும், ஜீவாத்மாவானது தகுந்த முறையில் பரமாத்மாவிடம் சேரும் நெறியையும், பரமாத்மாவிடம் ஜீவாத்மாவானது அடையாதவாறு உண்டாகும் ஊழ்வினையாகிய தடையையும் ஓதுதலாகும். அத்தகைய தடையிலிருந்து விடுபட்டுப் பரமாத்மாவைச் சாரும் பேரின்ப வாழ்க்கையையும் திருவாய்மொழியானது ஓதவல்லது.

(தக்க நெறி – ஞானமார்க்கம்

வாழ்வினை – உயிரானது பரமாத்மாவிடம் சேர்ந்து மகிழும் மெய்ப்பாங்கு.

குருகையர் கோன் – நம்மாழ்வார்.

வேதம் – திருவாய்மொழி.)

**ஆழ்வார் திருவடிகளே சரணம்.**

# நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழி

## முதலாம் பத்து

## 1 ஆம் திருவாய்மொழி – உயர்வற உயர் நலம்

### ஆன்ம உபதேசம்

### கலிவிருத்தம்

(சுமாஸ் ராகம் – ஆதி தாளம்)

*2082. *உயர்வற உயர்நலம் உடையவன் எவன் அவன்**
*மயர்வற மதி நலம் அருளினன் எவன் அவன்**
*அயர்வறும் அமரர்கள் அதிபதி எவன் அவன்**
*துயரறு சுடரடி தொழுது எழு என் மனனே.* (1)

**தெளிவுரை**

மனமே ! தன்னைவிட உயர்வு உடையவர் எனவும், நலம் உடையவர் எனவும் எவரும் இலர் என்னும் பெருமையுடையவரும், அஞ்ஞானத்தை விலக்கித் தெளிந்த ஞானத்தை அருளிச் செய்தவரும், எத்தன்மையிலும் குறைவற்றவர்களாகி நித்தியப் பிரகாசம் உடைய தேவர்களின் தலைவரும் ஆகிய, பரம்பொருளின் ஒளி மிக்க திருவடியைத் தொழுது பிறவியாகிய துயரத்தைத் தீர்த்துக் கொள். அப்பரம்பொருளின் திருவடியைத் தொழுது அஞ்ஞான இருளிலிருந்து மீண்டெழுக.

இவண், உயிர்கள் கொண்டுள்ள அஞ்ஞானமாகிய இருளை இறைவனின் ஒளிமயமான திருவடியானது விலக்கிக் காக்கும் எனச் சுட்டப் பெற்றது.

(எவனவன் என்பது யவனவன் என்பதும் பாடம்.)

இந்த 1 ஆம் திருவாய்மொழி முழுவதும் கோயில் திருவாய்மொழியில் அநுசந்திக்கப்படுகிறது.

*2083. மனனக மலமற மலர்மிசை யெழுதரும்**
*மனனுணர் வளவிலன் பொறியுணர் வவையிலன்**
*இனனுணர் முழுநலம் எதிர் நிகழ் கழிவினும்**
*இனனிலன் எனன் உயிர் மிகுநரை யிலனே.* (2)

**தெளிவுரை :**

பரமாத்மாவானவர், காமம் கோபம் முதலான அழுக்காகிய மலங்களை நீக்கிய ஞானிகளின் இதயமாகிய தாமரையில் விளங்குபவர் ; மனத்தால் உணரப்படுவதற்கு அரியவர் ; மெய், வாய், கண், நாசி, செவி என்னும் ஐம்புலன்களாலும் உணர்வதற்கு அரியவர் ; பரிபூரண ஞானானந்த வடிவினராகவும், கடந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என எல்லாக் காலங்களிலும் திகழ்பவராகவும், தனக்கு நிகராக ஒருவரும் இன்றித் தனிப் பொருளாகவும் ஒப்புயர்வு அற்றவராகவும் இருப்பவர் ; தன்னினும் மிக்கவர் என யாரும் இல்லாத சிறப்புடன் திகழ்பவர். அப்பரமன், என்னுடைய நல்லுயிராகத் திகழ்பவர் ஆவர்.

பந்தமறுத் தெனையாண்டு பரிசறஎன் துரிசுமறுத்(து)
அந்தம்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

**உரை:** வெந்து விழும் உடம்பின் சார்பாய பிறப்பை நிலையான தென்றெண்ணித் தீவினைகளை மிகச் செய்து, பூங்கொத்துக் களை யணிந்த கூந்தலையும் சங்கினாலாய வளையல்களையு மணிந்த பெண்டிரது குவிந்த நகிலின் மேல் விருப்பம் வைக்கு மியல்புடைய எனது பாசத்தை நீக்கி, ஆட்கொண்டு, என் உயிர்ப் போதங் கெடும்படி என் குற்றத்தை யொழித்து முடிவான பேற்றை எனக்கருள் செய்த முறையை வேறு யார் பெற வல்லார்? இஃதே அதிசயமே!

**குறிப்பு:** கொத்து என்பதன் மெலிவு, கொந்து. கோல் - சங்கு. துரிசு - குற்றம். அந்தம் - முடிவான இன்பம், முடிவான நிலை.

7. தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழுருவி
உய்யுநெறி காட்டுவித்திட்டு (ஓ)ங்காரத் துட்பொருளை
ஐயன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

**உரை:** பெண்டிர் மயக்கிலே அமிழ்ந்து விழுதற்குரியேனை மெதுவாகக் கொண்டு போய், மலமாகிய அடிப்படையை உருவி (எறிந்து), உய்தி கூடும் வழியைக் காண்பித்து, ஓங்காரத்தின் உண்மைக் கருத்தினை அப்பன் எனக்கருள் செய்த விதம் வேறு யார் பெற வல்லார்? இஃதே அதிசயமே!

8. சாதல்பிறப் பென்னுந் தடஞ்சுழியில் தடுமாறிக்
காதலின்மிக் கணியிழையார் கலவியிலே விழுவேனை
மாதொருகூ றுடையபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஆதிஎனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

**உரை:** பிறப்பு இறப்பென்னும் பெரிய சுழியிலகப்பட்டுத் தடுமாறிக் காம மிகுந்து அழகிய நகையுடைய மாதர் புணர்ச்சியிலே விழுமியல்புடைய என்னை, உமையொரு பாகன் தனது திருவடியே அடையும்படி, (எவற்றிற்கும்) ஆதியாகிய அவன் அருள் செய்தவாறு யார் பெற வல்லார்? இஃதே அதிசயமே!



9. செம்மைநலம் அறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமலம் அறுவித்து முதலாய முதல்வன்தான்
நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மைஎனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

**உரை:** எவற்றிற்கும் ஆதியாகிய தலைவன், நேர்மையின் நயம் அறியாத மூடரொடுந் திரியுமியல்புடைய எனது மூவகைப் பாசங்களையும் களைந்து, (ஒன்றுக்கும் பற்றாத) அடியேங் களையும் ஒரு பொருளாக மதித்து, நாயைச் சிவிகையி லேற்றினாற் போல உயர்வித்த தாய் போல்வான் எனக்கருளிய விதம் வேறு யார் பெற வல்லார்? இஃதே அதிசயமே!

10. செத்திடமும் பிறந்திடமும் இனிச்சாவா திருந்திடமும்
அத்தனையும் அறியாதார் அறியுமறி வெவ்வறிவோ
ஒத்தநிலம் ஒத்த பொருள் ஒரு பொருளால் பெரும்பயனை
அத்தன்எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.

**உரை:** இறந்த இடமும் பிறந்த இடமும் இனிமேல் சாவாது இருக்கும் இடமும் ஆகிய அனைத்தையும் அறியாத மாந்தர் அறியும் அறிவு எவ்வகைத்தாக இருக்கும்? என் அப்பனாகிய இறைவன் எனக்கு ஏற்ற இடத்தையும், பொருந்திய பொருளை யும், அப்பொருளால் பெரும் பயனையும் எனக்கு அருளிய விதம் வேறு யார் பெற வல்லார்? இஃதே அதிசயமே!

*திருச்சிற்றம்பலம்*

*திருவாசகம் முற்றிற்று.*

தெளிவுரை

பரமாத்மா வானவர், உண்டு என்று கூறுபவர்களுக்கு, அவ்வாறே விளங்குபவர். ஈச்சுவரனை இல்லை என்று நாத்திகம் பேசினாலும், அப் பரமன், உண்டு என்பதே மெய்ம்மை. இவ்வாறு பேசப்படுவதற்கு, உருவம் உடைய உலகப் பொருள்யாவும் அப்பரம்பொருளின் தூல சரீரமாகவும், உருவம் இல்லாத பொருள்கள் யாவும் சூக்கும சரீ மாகவும் உடையது. அப்பெருமான் இவ்விரு தன்மையாலும் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்தவராவார்.

2091. பரந்ததண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன்*
பரந்தஅண் டமிதென நிலவிசும்பு ஒழிவற*
கரந்தசில் இடந்தொறும் இடந்திகழ் பொருள் தொறும்*
கரந்தெங்கும் பரந்துளன் இவையுண்ட கரனே. (10)

தெளிவுரை

பிரளய காலத்தில் உலகம் யாவையும் தமது வயிற்றுள் அடக்கி ஆலிலை மேல் பள்ளி கொள்ளும் நாராயணன், விரிந்த கடலின் துளிகள் தோறும் பரந்து விளங்குபவர், நிலத்திலும், ஆகாயத்திலும் நீக்கமற நிறைந்துள்ளவர்.

2092. ✱கரவிசும்பு எரிவளி நீர் நிலம் இவை மிசை *
வரன் நவில் திறல்வலி யளிபொறை யாய் நின்ற*
பரன் அடி மேல்குரு கூர்ச்சட கோபன் சொல் *
நிரல் நிறை யாயிரத் திவைபத் தும் வீடே. (11)

தெளிவுரை

உறுதிமிக்க ஆகாயத்தின்பால் பொருந்தும் ஓசையும், நெருப்பின்பால் பொருந்தும் சக்தியும், காற்றின்பால் பொருந்தும் வலிமையும், நீரின்பால் பொருந்தும் குளிர்ச்சியும், நிலத்தின்பால் பொருந்தும் பொறுமையும் ஆகி அவற்றைத் தமது வயமாகப் பெற்றுள்ள பரம்பொருளைப் போற்றிக் குரு கூரில் விளங்கும் நம்மாழ்வார் அருளிய ஆயிரம் பாசுரங்களில் இத் திருப்பாசுரங்களான பத்தினைச் சேவிப்பவர்கள், வீட்டின்பத்தைப் பெறுவார்கள்.

(வீடு – மோட்சம்; முத்தியுலகம்.)

மிப்பு

பாசுரங்களின் அடியை இரண்டு முறை சேவித்தலையும், நிறுத்திச் சவித்தலையும் உணர்த்தும் மரபிற் கேற்ப "*" என்னும் குறியானது டப்பட்டுள்ளது. இது மேற்கொண்டு வரும் எல்லாப் பாசுரங்களுக்கும் பாருந்தும்.

**ஆழ்வார் திருவடிகளே சரணம்.**



உயர்வேபரன்படியை உள்ளதெல்லாம் தான்கண்டு*
உயர்வேதநேர் கொண்டுரைத்து - மயர்வேதும்*
வாராமல் மானிடரைவாழ்விக்கும் மாறன்சொல்*
வேராகவே விளையும் வீடு.

**சீயர் திருவடிகளே சரணம்.**

## முதல் பத்து

## 2 ஆம் திருவாய்மொழி – வீடுமின் முற்றவும் உலகிற்கு உபதேசம்

**பண் : முதிர்ந்த குறிஞ்சி**

**தாளம் : ஏழொத்து**

### வஞ்சிவிருத்தம்

(செஞ்சுருட்டி ராகம் – அட தாளம்)

2093✱ வீடுமின் முற்றவும்*
வீடுசெய்து * உம்முயிர்
வீடுடை யானிடை *
வீடு செய்ம் மினே. (1)

தெளிவுரை

மாந்தர்களே! மாயாகாரியமாக விளங்கும் உலகப் பந்தத்திலிருந்து விடுபட்டுச் சாந்தத்தைப் பெறுங்கள். அப்படிச் செய்து உம்முடைய ஆத்மாவை வீட்டுலகத்திற்கு உரிய ஸ்ரீமந் நாராயணனுடைய பாத தாமரையில் சரணமாகச் செய்யுங்கள்.

(வீடு – விடு வித்தல், முத்தியுலகம்.) இத்திருமொழி முழுவதும் கோயில் திருவாய்மொழியைச் சேர்ந்ததாகும்.

2094. ✱மின்னின் நிலையில *
மன்னுயிர் ஆக்கைகள் *
என்னும் இடத்து * இறை
உன்னுமின் நீரே. (2)

தெளிவுரை

இவ்வான்மா பெற்றுள்ள தேகமானது மின்னலைப் போன்று தோன்றி மறையும் தன்மையில் நிலையில்லாதது. எனவே, இதனை நொடிப் பொழுதாவது எண்ணிப் பார்த்துத் தெளிவு பெறுக. இறை – நொடிப்பொழுது. (இறை உன்னுமின் – "பரமாத்ம சுவரூபத்தை நினைக்க," எனவும் கொள்க.)

**தெளிவுரை**

பரமாத்மா வானவர், உண்டு என்று கூறுபவர்களுக்கு, அவ்வாறே விளங்குபவர். ஈச்சுவரனை இல்லை என்று நாத்திகம் பேசினாலும், அப் பரமன், உண்டு என்பதே மெய்ம்மை. இவ்வாறு பேசப்படுவதற்கு, உருவம் உடைய உலகப் பொருள்யாவும் அப்பரம்பொருளின் தூல சரீரமாகவும், உருவம் இல்லாத பொருள்கள் யாவும் சூக்கும சரீ மாகவும் உடையது. அப்பெருமான் இவ்விரு தன்மையாலும் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்தவராவார்.

2091. பரந்ததண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன்*
பரந்தஅண் டமிதென நிலவிசும்பு ஒழிவற*
கரந்தசில் இடந்தொறும் இடந்திகழ் பொருள் தொறும்*
கரந்தெங்கும் பரந்துளன் இவையுண்ட கரனே. (10)

**தெளிவுரை**

பிரளய காலத்தில் உலகம் யாவையும் தமது வயிற்றுள் அடக்கி ஆலிலை மேல் பள்ளி கொள்ளும் நாராயணன், விரிந்த கடலின் துளிகள் தோறும் பரந்து விளங்குபவர், நிலத்திலும், ஆகாயத்திலும் நீக்கமற நிறைந்துள்ளவர்.

2092. ✱கரவிசும்பு எரிவளி நீர் நிலம் இவை மிசை *
வரன் நவில் திறல்வலி யளிபொறை யாய் நின்ற*
பரன் அடி மேல்குரு கூர்ச்சட கோபன் சொல் *
நிரல் நிறை யாயிரத் திவைபத் தும் வீடே. (11)

**தெளிவுரை**

உறுதிமிக்க ஆகாயத்தின்பால் பொருந்தும் ஓசையும், நெருப்பின்பால் பொருந்தும் சக்தியும், காற்றின்பால் பொருந்தும் வலிமையும், நீரின்பால் பொருந்தும் குளிர்ச்சியும், நிலத்தின்பால் பொருந்தும் பொறுமையும் ஆகி அவற்றைத் தமது வயமாகப் பெற்றுள்ள பரம்பொருளைப் போற்றிக் குரு கூரில் விளங்கும் நம்மாழ்வார் அருளிய ஆயிரம் பாசுரங்களில் இத் திருப்பாசுரங்களான பத்தினைச் சேவிப்பவர்கள், வீட்டின்பத்தைப் பெறுவார்கள்.
(வீடு – மோட்சம்; முத்தியுலகம்.)

**குறிப்பு**

பாசுரங்களின் அடியை இரண்டு முறை சேவித்தலையும், நிறுத்திச் சவித்தலையும் உணர்த்தும் மரபிற் கேற்ப"✱" என்னும் குறியானது டப்பட்டுள்ளது. இது மேற்கொண்டு வரும் எல்லாப் பாசுரங்களுக்கும் பாருந்தும்.

**ஆழ்வார் திருவடிகளே சரணம்.**



உயர்வேபரன்படியை உள்ளதெல்லாம் தான்கண்டு*
உயர்வேதநேர் கொண்டுரைத்து - மயர்வேதும்*
வாராமல் மானிடரைவாழ்விக்கும் மாறன்சொல்*
வேராகவே விளையும் வீடு.

**சீயர் திருவடிகளே சரணம்.**

## முதல் பத்து

## 2 ஆம் திருவாய்மொழி – வீடுமின் முற்றவும் உலகிற்கு உபதேசம்

**பண் : முதிர்ந்த குறிஞ்சி**

**தாளம் : ஏழொத்து**

### வஞ்சிவிருத்தம்

(செஞ்சுருட்டி ராகம் – அட தாளம்)

2093✱ வீடுமின் முற்றவும்*
வீடுசெய்து * உம்முயிர்
வீடுடை யானிடை *
வீடு செய்ம் மினே. (1)

**தெளிவுரை**

மாந்தர்களே! மாயாகாரியமாக விளங்கும் உலகப் பந்தத்திலிருந்து விடுபட்டுச் சாந்தத்தைப் பெறுங்கள். அப்படிச் செய்து உம்முடைய ஆத்மாவை வீட்டுலகத்திற்கு உரிய ஸ்ரீமந் நாராயணனுடைய பாத தாமரையில் சரணமாகச் செய்யுங்கள்.

(வீடு – விடு வித்தல், முத்தியுலகம்.) இத்திருமொழி முழுவதும் கோயில் திருவாய்மொழியைச் சேர்ந்ததாகும்.

2094. ✱மின்னின் நிலையில *
மன்னுயிர் ஆக்கைகள் *
என்னும் இடத்து * இறை
உன்னுமின் நீரே. (2)

**தெளிவுரை**

இவ்வான்மா பெற்றுள்ள தேகமானது மின்னலைப் போன்று தோன்றி மறையும் தன்மையில் நிலையில்லாதது. எனவே, இதனை நொடிப் பொழுதாவது எண்ணிப் பார்த்துத் தெளிவு பெறுக. இறை – நொடிப்பொழுது. (இறை உன்னுமின் – "பரமாத்ம சுவரூபத்தை நினைக்க," எனவும் கொள்க.)

பூமாலையும் சூடிக் கொடுத்தாள் ஆண்டாள். இந்த ஆண்டாளின் புகழைச் சொல்லிப் பாடுவாயாக.

(‘புதுவை’ – பழமையான ஊரை ‘வில்லி’ என்னும் பெயரையுடைய தலைவன் புதுப்பித்த காரணத்தால் ‘வில்லி புத்தூர்’ என்று ஆகியது)

சூடிக் கொடுத்த சுடர்கொடியே தொல்பாவை
பாடி அருளவல்ல பல்வளையாய் – நாடி நீ
வேங்கடவற்கு என்னை விதியென்ற இம்மாற்றம்
நாங்கடவா வண்ணமே நல்கு.

எளிய உரை : பூமாலைகளை முதலில் நீ அணிந்து அழகு பார்த்துப் பிறகு வில்லிபுத்தூரில் உள்ள இறைவனுக்குக் கொடுத்த ஒளி வீசும் கொடி போன்றவளே!. பழமையான பாவை நோன்புக்கு உரிய பாசுரங்களைப் பாடி அருளியவளே! பல வளையல்களை அணிந்தவளே! "திருவேங்கடத்தில் கோயில் கொண்டுள்ள இறைவனுக்கு என்னைத் தருக" என்று நீ ஆராய்ந்து கூறினாய். நீ கூறிய சொல்லை நாங்கள் மீறாது பாவை நோன்பு நோற்க அருள் புரிவாயாக.

பூமாலையும் சூடிக் கொடுத்தாள் ஆண்டாள். இந்த ஆண்டாளின் புகழைச் சொல்லிப் பாடுவாயாக.

('புதுவை' – பழமையான ஊரை 'வில்லி' என்னும் பெயரையுடைய தலைவன் புதுப்பித்த காரணத்தால் 'வில்லி புத்தூர்' என்று ஆகியது)

சூடிக் கொடுத்த சுடர்கொடியே தொல்பாவை
பாடி அருளவல்ல பல்வளையாய் – நாடி நீ
வேங்கடவற்கு என்னை விதியென்ற இம்மாற்றம்
நாங்கடவா வண்ணமே நல்கு.

எளிய உரை : பூமாலைகளை முதலில் நீ அணிந்து அழகு பார்த்துப் பிறகு வில்லிபுத்தூரில் உள்ள இறைவனுக்குக் கொடுத்த ஒளி வீசும் கொடி போன்றவளே!. பழமையான பாவை நோன்புக்கு உரிய பாசுரங்களைப் பாடி அருளியவளே! பல வளையல்களை அணிந்தவளே! "திருவேங்கடத்தில் கோயில் கொண்டுள்ள இறைவனுக்கு என்னைத் தருக" என்று நீ ஆராய்ந்து கூறினாய். நீ கூறிய

எட்டடி நாற்சீர் ஒருவிகற்பக்
கொச்சகக் கலிப்பா

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர் !
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந் தொழிலன் நந்தகோ பன்குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாராயணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய் (1)

எளிய உரை : சிறந்த அணிகலன்களை அணிந்த பெண்களே ! சிறப்புகள் மிகுந்த ஆயர்பாடியில் வாழும் செல்வச் சிறுமிகளே! இது மார்கழி மாதம். முழு நிலவு தோன்றும் பௌர்ணமி நாள். நீராட விரும்பி வரும் பெண்களே வாருங்கள்.

கூர்மையான வேலாயுதத்தை உடைய நந்த கோபன் – அழகான கண்களையுடைய யசோதை ஆகியோரின் மகன் கண்ணன். அவன் இளம் சிங்கத்தைப் போன்றவன். கரிய நிறம் உடையவன். சிவந்த கண்களையும் ஒளி வீசும் நிலவைப் போன்ற முகத்தையும் உடையவன். அவனே நாராயணன். அவன் நமக்கே பறையைத் தருவான். இந்த உலகத்தில் உள்ளவர்கள் நம்மைப் போற்றிப் புகழுமாறு நீராடுவோம் வாருங்கள்.

ஏல் ஓர் எம் பாவை – ஏலோரெம் பாவை. எம் பாவை என்னும் சொற்கள் பாவை நோன்பைக் குறிப்பவை.

வையத்து வாழ்வீர்கள்! நாமும்நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரம னடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி





மையிட் டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்
செய்யா தனசெய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய். (2)

(ஏற்கனவே பாவை நோன்பு நோற்று அனுபவ உடைய பெண்கள், புதிதாக நோற்கும் பெண்களுக்கு கூறியது)

எளிய உரை : இவ்வுலகில் வாழ்பவர்களே! நாம் நமது பாவை நோன்பில் பின்பற்ற வேண்டிய செயல் முறைகளை கேளுங்கள். பாற்கடலில் அழகாகக் கண் உறங்குகின் பரமனின் (திருமாலின்) திருவடிகளைப் பாட வேண்டு நெய், பால் இவற்றை உண்ணக் கூடாது. விடியற்காலைய எழுந்து நீராட வேண்டும். கண்களுக்கு மை தீட்டுதல் கூடா மலர்களைச் சூடிக்கொள்ளக் கூடாது. செய்யத்தக செயல்களைச் செய்ய மாட்டோம். சொல்லக் கூட சொற்களைச் சொல்ல மாட்டோம். நம்மால் முடி உதவிகளைப் பிறருக்குச் செய்ய வேண்டும்.)

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்குபெருஞ் செந்நெலூ டுகயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.

எளிய உரை : உயர்ந்த உருவம் எடுத்துக் கொண்டு உ தனது காலால் அளந்த உத்தமனுடைய பெயரைப் பாடி பாவை நோன்பிற்காக நீராடுவோம். அவ்வாறு நீ பாவை நோன்பு நோற்றால் கிடைக்கும் நன்மைக நாம்நமது ஊரில் நோற்கும் பாவை நோன்பின் பயனா முழுவதும் மாதம் மூன்று மழை பொழியும். அதனால்

நீர்வளம் பெருகி செந்நெல் ஓங்கி வளரும். அந்த நெற்பயிர்களுக்கு இடையில் மீன்கள் துள்ளி விளையாடும்.

மென்மையான குவளை (நெய்தல்) மலர்களில் புள்ளிகள் உடைய வண்டுகள் கண்ணுறங்கும். ஆயர்கள் வள்ளல் தன்மையுடைய பசுக்களின் மடியில் ஓயாமல் சுரக்கும் மார்பகத்தைப் பற்றிப் பால் குடங்களை நிறைப்பர். இவ்வளவு வளமை ஏற்படுவதால் நமது இல்லங்களில் நீங்காத செல்வம் நிறையும்.

இப்பாடலில் 'ஓங்கி உலகு அளந்த உத்தமன்' என்னும் சொற்றொடரில் திருமால் 'வாமனன்' என்னும் அவதாரம் எடுத்த கதை கூறப்பட்டுள்ளது.

'மகாபலி' என்னும் கொடுங்கோல் அரசனை ஆட்கொள்வதற்காகத் திருமால் குறுகிய உருவம் கொண்டு அவனது அரசவைக்கு அந்தணன் வேடத்தில் வந்தார். தவம் செய்வதற்குத் தனது காலால் அளக்கும் படி மூன்றடி நிலம் பெற்றார். நிலத்தை அளக்கும்போது திருமால் வானளாவிய உருவம் எடுத்து, நில உலகில் ஓர் அடியும், வானுலகில் ஓர் அடியும் அளந்து விட்டு, முன்றாம் அடியை எங்கே வைப்பது என்று கேட்டார்.

மகாபலி மன்னன் மூன்றாம் அடியைத் தனது தலையில் வைத்து அளக்குமாறு வேண்டியனான். திருமால் அவ்வாறு செய்து மகாபலி மன்னனை ஆட்கொண்டார்.

ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வ னுருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (4)





எளிய உரை : கடல் போன்ற அகன்ற பரப்புடைய நீரைக் கொடுக்கக் கூடிய மழைக் கடவுளே! நீ எதனையும் மூடி மறைக்காதே. நீ கடலில் மூழ்கி நீரை முகந்து கொண்டு வானத்தை அடைய வேண்டும். படைப்புகள் எல்லாம் அழியும் காலத்தில்கூட தான் அழியாத முழுமுதற் பொருளைப் போலக் கரிய நிறமுடைய மேகமாக மாறவேண்டும். அழகான தோள்களையுடைய பத்மநாபனின் (திருமாலின்) ஒரு கையில் உள்ள சக்கரத்தைப் போல் மின்ன வேண்டும். மற்றொரு கையில் உள்ள வலம்புரிச் சங்கைப் போல ஓசை இட வேண்டும்., திருமாலின் 'சாரங்கம்' என்று சொல்லக் கூடிய வில்லில் இருந்து புறப்படும் அம்பு போல நாங்கள் வாழ மழை பொழிவாயாக. நாங்கள் மார்கழி நீராடி மகிழ்வோம்.

| | | |
|---|---|---|
| கார்மேகம் | – | திருமாலின் கரிய தோற்றம் |
| மின்னல் | – | திருமாலின் சக்கரத்தின் ஒளி |
| அதிர்தல் (இடி) | – | திருமாலின் வலம்புரிச்சங்கின் ஒலி |
| மழை | – | திருமாலின் 'சாரங்கம்' என்னும் வில்லில் இருந்து புறப்படும் அம்புகள் |

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் மணிவிளக்கைத்
தாயைக் குடல்விளக்கம் செய்ததா மோதரனைத்
தூயோமாய் வந்துநாம் தூமலர் தூ வித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய் (5

எளிய உரை : மாயச் செயல்கள் செய்பவன். அவ வடமதுரைக்குத் தலைவன். தூய்மையான பெரி நீர்ப்பரப்பினையுடைய யமுனை ஆற்றின் கரையி வாழ்பவன். ஆயர்களுடைய குடியிலே தோன்றிய அழகா விளக்கைப் போன்றவன்.

தன்னைப் பெற்றெடுத்த தேவகி, வளர்த்துவிட்

யசோதை ஆகியவர்களின் புகழை உலக மக்கள் அறியும்படிச் செய்தவன். அவன் தாமோதரன். அப்படிப்பட்ட இறைவனை நாம் தூய்மையானவர்களாக வந்து, தூயமலர்களைத் தூவித் தொழுதல் வேண்டும்.

அவனது புகழை வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க வேண்டும். அவ்வாறு செய்தால் ஏற்கனவே நாம் செய்த பிழைகளும் நெருப்பில் விழுந்த பஞ்சு போல மறைந்து விடும். ஆகவே அவனது சிறப்பைச் சொல்வோமாக.

தாமம் – மாலை, உதரன் – வயிற்றை உடையவன். தாமம் உதரன் – தாமோதரன் – மாலை சூடிய வாயிற்றை உடையவன்.

புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ
பிள்ளாய்! எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (6)

எளிய உரை : பெண்ணே! பொழுது விடிந்து விட்டதால் பறவைகளும் ஓசையிடத் தொடங்கி விட்டன. கருடனின் தலைவனாகிய திருமாலின் கோயிலில் இருந்து ஒலிக்கின்ற வெண்சங்கின் பேரொலியை நீ கேட்கவில்லையா? எழுந்திரு.

'பூதகி' என்னும் பேயின் மார்பில் இருந்து சுரந்த பாலை உண்டவன். சகடாசூரன் என்பவன் சக்கர வடிவில் வந்த போது தனது காலால் உதைத்துக் கொன்றவன். திருப்பாற்கடலில் பாம்புப் படுக்கையில் துயில் கொள்ளும் மூலப் பொருள். இவ்வளவு சிறப்புகள் உடைய இறைவனை முனிவர்களும் யோகிகளும் தூக்கம் கலைந்து மெள்ள எழுந்து 'அரி' என்று கூறும் பேரொலி உள்ளத்தில் புகுந்து குளிர்விக்கிறதே.





நோன்புக்காக நீராடச் செல்லும் பெண்கள் பொழுது விடிந்தும் தூக்கத்திலிருந்து எழாத ஒரு பெண்ணிடம் கூறியததாக அமைந்துள்ளது. இப்பாடல் முதல் 'எல்லே இளங்கிளியே' என்னும் பாடல் முடிய உள்ள பத்துப் பாடல்களும் ஒரு தொகுப்பாக அமைந்துள்ளன. அதாவது மார்கழி நோன்புக்கு ஆயத்தமாகாமல் கண்ணுறங்கும் ஒரு பெண்ணிடம் பாடப் படுவதாக அமைந்துள்ளன இப்பாடல்கள்.

கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத் தன்கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ! பேய்ப்பெண்ணே
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழ லாய்ச்சியர் மத்தினால்
ஓசைப் படுத்தத் தயிரரவம் கேட்டிலையோ
நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன்மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ
தேச முடையாய்! திறவேலோ ரெம்பாவாய். (7)

எளிய உரை : பேய் போல் உறங்கும் பெண்ணே ஆனைச்சாத்தன் என்று சொல்லச் கூடிய பறவைகள் ஒன்றுடன் ஒன்று கலந்து 'கீசு கீசு' என்று எங்கும் ஒலி எழுப்பிப் பேசிக் கொள்ளும் ஒலி உனது காதில் விழவில்லையா?

ஆயர்ப் பெண்கள், தாங்கள் அணிந்துள்ள காசு, பிறப்பு ஆகிய அணிகலன்கள் 'கலகல' என்று ஓசையை எழுப்பும்படி மத்தினால் தயிர் கடையும் ஓசையும் உனக்குக் கேட்கவில்லையா? ஆயர்ப் பெண்களுக்கெல்லாம் நீ தலைவி என்று சொல்லிக் கொள்ளபவளே! நாராயணன் மூர்த்தியாகிய கேசவனை நாங்கள் பாடுகிறோம். அதைக் கேட்டும் படுக்கையிருந்து எழாமல் இருக்கிறாயோ? ஒளி வீசும் மேனியை உடையவளே கதவைத் திறப்பாயாக.

கேசவன் – திருமாலின் ஒரு பெயர். 'கேசி' என்னும் அரக்கனைக் கொன்ற காரணத்தால் இப்பெயர் ஏற்பட்டது

கீழ்வானம் வெள்ளென்று எருமைச் சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான்போ கின்றாரைப் போகாமல் காத்து உன்னைக்
கூவுவான் வந்து நின்றோம் கோது கலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென்றாராய்ந் தருளேலோரெம்பாவாய் (8)

எளிய உரை : நாரினால் கட்டப்பட்ட அணிகலன்களை அணிந்த பாவையே! கிழக்கு வானம் வெளுத்து விட்டது. எருமைகள் தங்கள் தொழுவத்திலிருந்து விடுதலை பெற்று மேய்ச்சலுக்காகக் கிளம்பிச் சென்றுவிட்டன. ஆயர்க் குலப் பெண்கள் பாவை நோன்புக்காகப் புறப்பட்டுச் சென்று விட்டார்கள். உன்னையும் அழைத்துச் செல்வதற்காக மற்ற பெண்களைப் போகவிடாமல் காக்க வைத்துள்ளோம். இப்போது உன்னைக் கூவி அழைத்துச் செல்வதற்காக வந்துள்ளோம். பெண்ணே! எழுவாயாக.

இசைக் கருவிகளுடன் அவனைப் பாடுவோம். குதிரை வடிவம் எடுத்துக் கொண்டு வந்த அரக்கனின் வாயைப் பிளந்தவனும், மல்யுத்தம் செய்ய வந்தவர்களைக் கொன்றவனுமாகிய, தேவர்களுக்கு எல்லாம் தேவனாகிய கண்ணனை நாம் வணங்கினால் நமது குறைகளைக் கேட்டு ஆராய்ந்து அருள் செய்வான்.

திருமால் கண்ணனாக அவதாரம் எடுத்து கோகுலத்தில் வளர்ந்த போது கம்சனால் அனுப்பப்பட்ட குதிரை வடிவம் கொண்டு வந்தவன் 'கேசி' என்னும் அரக்கன். கம்சனின் அழைப்பை ஏற்று வடமதுரைக்குச் சென்ற போது கண்ணனைக் கொல்ல மல்யுத்த வீரர்களைக் கம்சன் ஏற்பாடு செய்தான். அவர்களைக் கண்ணன் கொன்றான். இவ்விரு நிகழ்ச்சிகள் இப்பாடலில் இடம் பெற்றுள்ளன.





தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய
தூபங்கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்
மாமீர்! அவளை எழுப்பீரோ உன்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
மாமாயன் மாதவன் வைகுந்த னென்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய் (9)

எளிய உரை : தூய்மையான மாணிக்கக் கற்களால் இழைக்கப்பட்ட மாளிகை. சுற்றிலும் விளக்குகள் எரிகின்றன. மணம் வீசும் புகை கமழ்கிறது. அங்குள்ள படுக்கையில் கண்ணுறங்கிக் கொண்டிருக்கின்ற மாமன் மகளே! மணிகள் கட்டப்பட்ட கதவின் தாழ்ப்பாளைத் திறப்பாயாக.

அத்தையே! உறங்கிக் கொண்டிருக்கின்ற உமது மகளை எழுப்ப மாட்டீர்களா? உமது மகள் ஊமையோ அல்லது செவிடோ? நீண்ட தூக்கம் கொள்கின்றாளோ?

'அளவற்ற மாயச் செயல்கள் செய்த மாதவனே! வைகுண்டத்தில் வாழ்பவனே!' என்று பலமுறை சொல்லிப் பாடுகிறோம். அத்தையே! அவளை எழுப்புங்கள்.

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்
மாற்றமும் தாராரோ? வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கர்ணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்த லுடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய். (1

எளிய உரை : பாவை நோன்பு நோற்றுச் சுவர்க்கம் செ
நினைக்கின்ற பெண்ணே! வாசலைத் திறவாதவர் பதில
சொல்லக் கூடாதா? மணம் வீசும் துளசி மாலையை (து

மாலை) தனது தலையிலே சூடியுள்ள நாராயணன் நாம போற்றித் துதித்தால் அருள் செய்வதற்கு ஆயத்தமாக இருக்கிறான்.

முன்பு ஒரு நாள், புண்ணியவானாகிய இராமபிரானால் தோல்வி அடைந்தான் கும்பகர்ணன். அவனுக்குப் பிறகு அவனுக்கே உரிய பெருந் தூக்கத்தை உனக்கே கொடுத்து விட்டானோ?

நீண்ட உறக்கத்தில் ஆழ்ந்து விட்ட பெண்ணே! கிடைத்தற்கு அருமையான அணிகலன் போன்றவளே! உறக்கம் நீங்கிக் கதவைத் திறப்பாயாக.

(கும்பகர்ணன் – இலங்கை இராவணனின் தம்பி, நீண்ட காலம் தூங்குபவன்).

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!
புற்றர வல்குல் புனமயிலே! போதராய்
சுற்றத்துத் தோழிமா ரெல்லாம் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட
சிற்றாதே பேசாதே செல்வப்பெண் டாட்டி! நீ
எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய் (11)

எளிய உரை : ஆயர்க்குலத்தினர் கன்றுகளையுடைய பசுக்களிடமிருந்து பால் கறப்பார்கள். குற்றமற்ற தொழில் அவர்களுடையது. இருப்பினும் வலிய வரும் பகைவர்களை போர் மேல் சென்று அவர்களின் வீரம் அழியும்படிச் செய்வார்கள். அப்படிப்பட்டவர்களின் குடும்பத்தில் பிறந்தவளே! பொன்னால் செய்யப்பட்ட கொடி போன்ற பெண்ணே !

புற்றில் வாழும் பாம்பின் படம் போன்ற அல்குலையும், ாட்டில் வாழும் மயில் போன்ற சாயலையும் உடையவளே! சல்வக் குடியில் பிறந்த பெண்ணே ! எழுந்து வருவாயாக.





நாங்கள் சுற்றம் சூழ வந்து உனது வீட்டின் முற்றத்தில் புகுந்து கரிய மேகத்தின் நிறமுடைய கண்ணனின் பெயர் சொல்லிப் பாடுகிறோம். நீ சிறிதேனும் எங்களுடன் பேசாமல் உறங்குவதற்குப் பொருள் என்ன?

ஆயர்க்குடிப் பெண்கள் அனைவரும் தேடி வந்த பெண் செல்வக் குடியில் பிறந்தவள் என்பதும் தூக்கம் கலைந்தும் கதவைத் திறக்காமல் இருக்கிறாள் என்பதும் இப்பாடலில் இருந்து அறிய முடிகிறது. சுற்றத்தார் பலருடன் செல்வக் குடிப் பெண்ணின் வீட்டு முற்றம் தேடி வந்து கண்ணனைப் புகழ்ந்து பாடிய பாடலைக் கேட்டு அவள் மெய்ம்மறந்திருக்கலாம்.

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிறங்கி
நினைத்து முலைவழியே நின்று பால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்
பனித்தலை வீழநின் வாசற் கடைபற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்
இனித்தா னெழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்
அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய் (12)

எளிய உரை : இளங்கன்றையுடைய எருமை தனது கன்றை அழைக்கும். கன்றுக்காக இரக்கப்பட்டுத் தனது மார்பின் வழியாகப் பால் சொறியும். அந்தப் பால் இடையர்களின் இல்லத்தை நனைத்துச் சேறாக்கும். அப்படிப்பட்ட நல்ல செல்வந்தனின் தங்கையே! மார்கழி மாதத்தின் பனி எங்கள் தலையில் விழ உனது வீட்டு வாசல் கதவைக் கையால் பிடித்துக் கொண்டு நிற்கிறோம்.

தனது கோபத்தால், தெற்குத் திசையிலுள்ள இலங்கைக்குத் தலைவனாகிய இராவணனைக் கொன்ற இராமனின் புகழை நாங்கள் பாடிக் கொண்டிருக்கும் போதும் நீ உனது வாயைத் திறக்காமல் இருக்கிறாய். இனிமேலாவது எழுந்திரு. இது என்ன பெரிய உறக்கம்? நாங்கள் உனது வீட்டின் முன் நின்று உன்னை அழைப்பது

எல்லா வீட்டுக்காரர்களுக்கும் தெரிந்து விட்டது.

(எருமையும் தனது கன்றுக்குட்டிக்காக இரக்கம் கொண்டு பால் சொரியும். ஆனால் மானிடப் பிறவியில் பிறந்து விட்ட உனக்கு எங்கள் மேல் இரக்கம் இல்லாமல் போய்விட்டதே என்று இடைக்குலப் பெண்கள் கூறுவதாக இப்பாடலில் மறைவான ஒரு பொருள் காணப்படுகிறது)

புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்
பிள்ளைகளெல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்றுப்
புள்ளும் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்
குள்ளக் குளிரக் குடைந்துநீ ராடாதே
பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய் (13)

எளிய உரை : இராமனாகப் பிறவி எடுத்த போது இலங்கை மன்னன் இராவணன் என்னும் அரக்கனின் தலையைக் கிள்ளி எறிந்தான். கண்ணனாகப் பிறவி எடுத்த போது தன்னைக் கொல்ல, ஒரு பறவை வடிவம் தாங்கி வந்த பகாசுரன் என்னும் அரக்கனின் வாயைக் கிழித்தான். இப்படிப்பட்ட புகழை எல்லாம் பாடி எல்லாப் பெண்களும் பாவை நோன்பு நோற்கும் இடத்திற்குச் சென்று விட்டார்கள். வியாழன் என்னும் கோள் மறைந்து (அஸ்தமித்து) விட்டது. வெள்ளி என்னும் கோள் உதயமாகி விட்டதை அறிவித்தது. புள்ளினங்களும் கூவுகின்றன.

மலரைப் போன்ற கண்களையுடையவளே! உனது கள்ளத்தனத்தை விட்டு விடு. இந்த நல்ல நாளில் எங்களுடன் சேர்த்து உடலும் உள்ளமும் குளிரும்படி நீரில் மூழ்கி நீராடாமல் படுக்கையில் கிடக்கிறாயோ?

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்





எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய் ! எழுந்திராய் நானாதாய் ! நாவுடையாய் !
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய் (14)

எளிய உரை : பெண்ணே! உங்கள் வீட்டின் பின் பக்கம் உள்ள தோட்டத்தில் இருக்கும் குளத்தில் செங்கழுநீர் (செவ்வாம்பல்) மலர்கள் இதழ்களை விரித்து மலர்ந்தன. ஆம்பல் மலர்கள் (அல்லி மலர்கள்) கூம்பிட்டன. போய்ப்பார். காவி நிறத்தில் தோய்த்துச் சாயம் எற்றப்பட்ட ஆடைகளை அணிந்து, வெண்மையான பற்களையுடைய முனிவர்கள் தங்கள் இருப்பிடத்திற்குச் சென்று சங்குகளை முழக்கிப் பொழுது விடிந்தது என்பதை அறிவிக்கப் புறப்பட்டு விட்டார்கள்.

"உங்களை நாளைக்கு நான் முன்னால் வந்து எழுப்புவேன்" என்று நேற்று நீ உனது வாயால் கூறினாயே. இப்போது நாங்கள் உன்னை வந்து எழுப்புகிறோம். வெட்கம் கெட்டது உனது நாக்கு. எழுந்திரு. சங்கும் சக்கரமும் ஏந்துகின்ற அகன்ற கைகளையும், தாமரை மலர் போன்ற கண்களையும் உடையவன் கண்ணன். தூக்கத்தில் இருந்து எழுந்து அவனைப் பாடு.

மாணிக்கவாசகரின் திருவெம்பாவை 6 ம் பாடலில் 'நாளைக்கு நானே வந்து உங்களை முன்னம் எழுப்புவேன்'. என்று ஒரு பெண் கூறுகிறாள். இந்த உரையாடலை இப்பாடலின் 'எங்களை முன்னம் எழுப்புவான் வாய் பேசும் நங்காய்' என்னும் உரையாடலுடன் ஒப்பிட்டுப் பார்த்து மகிழ்க.

எல்லே இளங்கிளியே இன்னம் உறங்குதியோ
சில்லென் றழையேன்மின் நங்கைமீர் போதருகின்றேன்
வல்லைஉன் கட்டுரைகள் பண்டேஉன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக
ஒல்லைநீ போதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ? போந்தார்போந் தெண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய் (15)

... வந்த பெண்கள்: ஏனடீ, ... கிளி போன்ற பெண்ணே! இன்னுமா உறங்குகிறாய்?

துயில் நீங்கி எழாத பெண்: பெண்களே! சில் என்று கடுமையான சொற்களைக் கூறி எழுப்பாதீர்கள். இதோ புறப்பட்டுவிட்டேன்.

துயில் எழுப்ப வந்த பெண்கள்: வாய்ப்பேச்சில் வலிமையுடையவள்நீ. நீ உண்மையே பேசுவாய் என்பதை நாங்கள் முன்பே அறிவோம்.

துயில் நீங்கி எழாத பெண் : நீங்கள்தான் வாய்ப்பேச்சில் வலிமை உள்ளவர்கள். நீங்கள் கூறுவதுபோல நான் தான் பேச்சில் வலிமையுடையவள் என்றாலும் அப்படியே ஆகிவிட்டுப் போகிறேன்.

துயில் எழுப்ப வந்த பெண்கள் : எங்களிடம் உனக்கு என்ன மனவேறுபாடு? சீக்கிரம் வா.

துயில் நீங்கி எழாத பெண் : எல்லோரும் வந்து விட்டார்களா?

துயில் எழுப்ப வந்த பெண்கள் : வந்தவர்களை நீயே வந்து எண்ணிப் பார்த்துக் கொள். வலிமையான 'குவலாலயபீடம்' என்னும் யானையைக் கொன்றவன் கண்ணன். தீயவர்களை அழிக்கக் கூடிய ஆற்றல் பெற்றவன் அவன். மாயச் செயல்கள் செய்பவன். அவனை நினைத்துப்பாடிப் பாவை நோன்பு நோற்க விரைந்து வருவாயாக.

(இப்பாடலுடன் திருவாய்மொழி 4 –ஆம் பாடலில் தூக்கம் கலைந்து எழாத பெண், "வண்ணக்கிளி மொழியார் எல்லாரும் வந்தாரோ" என்று கேட்க, துயில் எழுப்ப வந்த பெண்கள், உள்ளவாறு சொல்லுகிறோம். வந்தவர்களை நீயே வந்து எண்ணிப் பார்த்துக் கொள்" என்று கூறுகிறார்கள். இரு பாடல் வரிகளிலும் உள்ள கருத்து ஒற்றுமையைக் காண்க.)





நாயக னாய்நின்ற நந்தகோ பனுடைய
கோயில் காப்பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில் காப்பானே! மணிக்கதவம் தாள்திறவாய்
ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னம்முன்னம் மாற்றாதே அம்மா நீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய் (16)

<u>எளிய உரை :</u> ஆயர்க்குடி மக்களுக்கெல்லாம் தலைவனாக இருக்கக் கூடியவன் நந்தகோபன். அவனது வீட்டிற்குக் காவலிருப்பவனே! கொடிகள் கட்டப்பட்ட தோரண வாயிலைக் காப்பவனே! மணிகளோடு கூடிய கதவின் தாழ்ப்பாளைத் திறப்பாயாக. மாயச் செயல்களைச் செய்யும் மணிவண்ணன் (கரிய நிறம் உடையவன்) எங்களை இன்று சந்தித்து ஆட்கொள்வதாக நேற்று கூறினான். அவனை தூக்கத்தில் இருந்து எழுப்பும் பொருட்டுத் திருப்பள்ளி எழுச்சியை நாங்கள் பாட வேண்டும். அதற்காக உடலும் உள்ளமும் தூய்மையாக வந்துள்ளோம். வாயில் காப்பவனே! முதல் முதலில் உனது வாயால் 'முடியாது' என்று மறுப்புச் சொல்லிவிடாதே. கண்ணன் வீட்டுக் கதவைத் திறப்பாயாக.

அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான்! நந்தகோ பாலா! எழுந்திராய்!
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!
எம்பெரு மாட்டி யசோதாய்! அறிவுறாய்
அம்பர மூடறுத் தோங்கி உலகளந்த
உம்பர்கோ மானே! உறங்காது எழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய் (17)

<u>எளிய உரை :</u> உடுக்கும் உடை, குடிக்கும் தண்ணீர், உண்ணும் உணவு இவற்றை எளியவர்களுக்கு வழங்கும் உயர்ந்த மனப்

கொண்ட நந்த கோபாலா! நீ எங்கள் குலத்திற்குத் தலைவன். நீ தூக்கம் நீங்கி எழுந்திருப்பாயாக. கொழுகொம்பைப் போன்ற பெண்களுக்கெல்லாம் கொழுந்து போன்ற யசோதையே! நீ எங்களுக்குத் தலைவி அல்லவா. நீ உனது மகனாகிய கண்ணனை தூக்கம் கலைந்து எழும்படி அறிவுறுத்தமாட்டாயா? ஆகாயத்தின் வழியாக ஓங்கி வளர்ந்த வாமன அவதாரத்தில் உலகை அளந்த கண்ணனே! தேவர்களின் தலைவனே! உறக்கம் நீங்கித் துயில் எழுவாயாக. செம்பொன்னால் செய்யப்பட்ட வீரக்கழல் என்னும் அணிகலனை அணிந்த செல்வனே! பலதேவனே! உனது தம்பியாகிய கண்ணனும் நீயும் இனியும் கண்ணுறங்காமல் துயில் எழுவீர்களாக.

உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்தகோபாலன் மருமகளே! நப்பின்னாய்!
சுந்தம் கமழும் குழலீ கடைதிறவாய்
வந்தெங்கும் கோழி அழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலி உன் மைத்துனன் பேர்பாட
செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய் (18)

எளிய உரை : ஓரிடத்தில் நிற்காத மதம் பிடித்த யானையை உடையவன். பகைவர்களைக் கண்டு ஓடாத தோள் வலிமை உடையவன் நந்தகோபன். அப்படிப்பட்ட நந்தகோபனின் மருமகளாகிய நப்பின்னையே! மனம் கமழும் கூந்தலை உடையவளே! கதவைத் திறப்பாயாக. (நப்பினனை –கண்ணனின் மனைவி) பொழுது புலர்ந்ததற்கு அடையாளமாகக் கோழிகள் கூவும் சத்தம் கேட்கின்றது. குருக்கத்திப் பந்தலின் மேல் குயில்கள் பலமுறை விடாமல் கூவுகின்றன. பந்தாடுகின்ற விரல்களையுடையவளே! உனது கணவனாகிய கண்ணனின் பெயரை நாங்கள் பாடுகின்றோம். நீ உனது செந்தாமரை மலர் போன்ற வளையல்கள் ஒலிக்கும் கைகளால் மகிழ்ச்சியுடன் கதவைத் திறப்பாயாக.





குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய்! நீ உன் மனாளனை
எத்தனை போதும் துயிலெழ வொட்டாய்காண்
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்
தத்துவ மன்று தகவேலோ ரெம்பாவாய் (19)

எளிய உரை : மணிமாலை அணிந்த கண்ணனே! குத்து விளக்கு எரிகிறது. யானைத் தந்தத்தால் செய்யப்பட்ட கால்களையுடைய கட்டிலில் போடப்பட்ட ஐந்து விதமான குணங்களையுடைய படுக்கையில் படுத்திருக்கிறாய். நீ கொத்தான மலர்கள் சூடிய உனது துணைவியாகிய நப்பின்னையின் மார்பகங்களைத் தழுவி கொண்டிருக்கிறாய். வாய் திறந்து எங்களுடன் பேசமாட்டாயா மை தீட்டப்பட்ட அகன்ற கண்களையுடைய நப்பின்னையே உனது மனாளனை விடிந்து எவ்வளவு நேரம் ஆனாலு தூக்கத்தில் இருந்து எழும்படி விடமாட்டாய். அவனை நீ சிறி நேரம் கூடப் பிரிந்திருக்க மாட்டாயா? நாங்கள் கூறுவது தத்து அல்ல. உனக்குத் தகுதியான செயலைச் செய்வாய (படுக்கையின் ஐந்து குணங்களாவன : அழகு, குளிர்ச்சி, மென் நறுமணம், வெண்மை நிறம்.)

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்
செப்பமுடையாய்! திறலுடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்
செப்பன்ன மென்முலை செவ்வாய்
நப்பின்னை நங்காய் திருவே! துயிலெழாய்
உக்கமும் தட்டொளியும் தந்து உன் மனாளனை
இப்போதே எம்மைநீ ராட்டேலோ ரெம்பாவா

எளிய உரை : தேவர்கள் முப்பத்து மூன்று
அவர்களுக்கு ஏதேனும் துன்பம் நேருவதற்கு

நடுநிலைமையும், வீரமும் உடையவனே. பகைவர்களுக்கு வெப்பத்தைக் கொடுப்பவனே! துயில் நீங்கி எழுவாயாக. கலசத்தைப் போன்ற மார்பினையும் சிவந்த வாயினையும், சிறுத்த இடுப்பையும் உடைய நப்பின்னையே! திருமகளே! உறக்கம் நீங்கி எழுவாயாக. பாவை நோன்புக்கு உரிய பொருள்களாகிய விசிறி, முகம் பார்க்கும் கண்ணாடி இவற்றையும் உனது மனாளனையும் எமக்குக் கொடு. எம்மை இப்போதே நீராட்டுவாயாக.

ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால் சொறியும் வள்ளல் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்
ஊற்ற முடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்
மாற்றார் உனக்கு வலிதொலைந்து உன் வாசல்கண்
ஆற்றாது வந்துஉன் னடிபணியு மாபோலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய் (21)

எளிய உரை: பால் கறக்கும்போது அதை ஏற்றுக் கொள்ளும் பால் கலயங்கள் நிறைந்து பொங்கி வழியும். பால் கறக்க மறுக்காத வள்ளல் தன்மையுடைய பெரும் பசுக்கூட்டத்தையுடைய நந்தகோபாலனின் மகனே! துயில் நீங்குவாயாக. வலிமையும் உயர்ந்த தோற்றமும் உடையவனே! உலகில் காணும் பொருள்களின் வடிவமாய் இருப்பவனேன! ஒளி வடிவானவனே! உனது பகைவர்கள் உன்னிடம் தோற்று, வலிமை எல்லாம் இழந்து உனது வாசலுக்கு வந்து வேறு வழி இல்லாமல் உனது பாதங்களில் விழுந்து கிடப்பார்கள். உனது புகழைப் பாட வந்தோம்.

அங்கன்மா ஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக் கட்டிற்கீழே
சங்க மிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே



செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித் தியனும் எழுந்தாற்போல்
அங்க ணிரண்டும் கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழந்தேலோ ரெம்பாவாய் (22

எளிய உரை: அழகான இந்த நிலவுலகிலுள்ள அரசர்க எல்லோரும் உன்மேல் அன்பு செலுத்தி வந்து உன அரியணையின் கீழ் கூட்டமாய் இருப்பது போல நாங்கள் உன இல்லம் தேடி வந்து கூடிவிட்டோம். மலர்ந்தும் மலரா நிலையிலுள்ள தாமரைப் பூப்போன்ற உனது கண்களின் பார்வ எங்கள் மேல் சிறிதுபடாதோ? வெண்ணிலவும் கதிரவனும் ஒ நேரத்தில் உதயமாவது போல உனது இரு கண்களாலும் எங்க நீ பார்த்தாயானால் எங்களைப் பிடித்த சாபங்கள் மறைந்து வி

மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலே நீ பூவைப்பூ வண்ணா! உன்
கோயில்நின்று இங்ஙனே போந்தருளி கோப்புடைய
சீரிய சீங்கா தனத்து இருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந்த தருளேலோ ரெம்பாவாய்

எளிய உரை: அது மழைக்காலம். மலையில் உள்ள ஒரு மழைக்காலம் ஆதலால் வெளியே வர முடியாமல் நீண்ட அந்தக் குகையிலே கிடக்கிறது ஒரு வீரமுடைய மழைக்காலம் நீங்கிய பிறகு அந்தச் சிங்கம் தனது இ கடமையை உணர்கிறது. தீப்பொறி பாய்வது போல கண்களைத் திறக்கிறது. தனது பிடரி மயிர் சிலிர்க்க திசைகளிலும் பெயர்ந்து சென்று தனது உடம்ப சோம்பல் முறித்துக் கர்ச்சனை எழுப்பிக் கொண்டு புறப் மேற்குறிப்பிட்ட சிங்கத்தைப் போல், காயாம் பூவினை நிறமுடையவனே! உனது இல்லத்திலிருந்து நாங்கள் இடத்திற்கு வந்து அழகிய அரியணையில் அமர்வாயாக

அமர்ந்து நாங்கள் உன்னிடம் வந்த காரியம் என்ன என்பதை ஆராய்ந்து எங்களுக்கு அருள் செய்வாயாக.

அன்று இவ் வுலகம் அளந்தாய்! அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்! திறல்போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி
கன்று குணிலா எறிந்தாய்! கழல்போற்றி
குன்று குடையா வெடுத்தாய்! குணம்போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றும் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய் (24)

எளிய உரை : அன்று (வாமன அவதாரம் எடுத்த போது) இவ்வுலகை அளந்தவனே! உனது திருவடிகளை வணங்குகிறோம். சக்கர வடிவம் தாங்கிக் கொண்டு உன்னைக் கொல்ல வந்த 'சகடாசுரனை' உதைத்தாய். உனது புகழை வணங்குகிறோம். கன்று வடிவில் வந்த 'வத்சாசூரனை' வெறும் தடியால் அடித்துக் கொன்றாய். 'கோவர்த்தனம்' என்னும் மலையைக் குடையாகத் தூக்கியவனே! உனது குணங்களை வணங்குகிறோம். பகைவர்களை வென்று அவர்களை அழிக்கின்ற உனது கையில் இருக்கும் வேலாயுதத்தை வணங்குகிறோம் என்று கூறி வணங்கி உனக்குப் பணிவிடைகள் செய்து அருளைப் (பறை) பெறுவதற்காகவே நாங்கள் இங்கு வந்துள்ளோம். எங்கள் மேல மனம் இரங்குவாயாக.

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளிந்து வளரத்
தரிக்கிலா னாகித் தான்தீங்கு நினைத்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய் (25)





எளிய உரை : கம்சனின் சிறையில் இருந்த வசுதேவனின் மனைவி ஆகிய தேவகிக்கு நீ மகனாய்ப் பிறந்தாய். அதே இரவில் ஆயர்பாடியில் இருந்த நந்தகோபனின் மனைவி யசோதையிடம் வந்து சேர்ந்து மகனாக மறைந்து வளர்த்தாய். இதைத் தாங்கிக் கொள்ள முடியாத கம்சன் உனக்குத் தீங்கு செய்ய நினைத்தான். அவனது தீய எண்ணத்தை அழித்து அவன் நெஞ்சில் நீ நெருப்பாக நின்றாய். நெடுமாலே! உன்னிடம் ஒன்றைக் கேட்டுப் பெறுவதற்காகவே நாங்கள் இங்கு வந்துள்ளோம். நீ எங்களுக்கு அருள் செய்வாயானால் திருமகளுக்கு உரிய உனது செல்வத்தையும் அடியார்களுக்கு ஆற்றிய உனது தொண்டினையும் நாங்கள் பாடுவோம். வருத்தம் தீர்ந்து மகிழ்ச்சி அடைவோம்.

மாலே! மணிவண்ணா! மார்கழி நீ ராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துஉன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே
கோல விளக்கே! கொடியே! விதானமே!
ஆலி னிலையாய்! அருளேலோ ரெம்பாவாய் (26

எளிய உரை : திருமாலே! மணிவண்ணனே! ஊழிக் காலத்தி
ஆலமரத்தின் இலையில் குழந்தையாகப் பள்ளி கொள்பவனே
மார்கழி மாதத்தில் நோன்பு நோற்கும் முறையைப் பற்
முன்னோர்கள் சொன்னவற்றை நாங்கள் உனக்குக் கூறுகிறோ
உலகங்களை எல்லாம் நடுங்க வைக்கும் பாலின் நிறமுடை
வெண்மையான 'பாஞ்சசன்னியம்' உனது சங்கு. அப்படிப்பட
சங்கை முழக்கி ஒலி எழுப்புவார்கள். பெரிய இசைக் கருவிகள
முழக்கி நீ பல்லாண்டுகள் வாழ்க என்று பாடுவார்கள். அழ
விளக்கையும் கொடிகளையும் (தோரணங்கள்) விதானத்
கட்டுவதற்கான பொருள்களையும் எமக்குத் த
அருள்புரிவாயாக. (விதானம் – பந்தலின் மேற்பகுதி).

கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா உன்தன்னை
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை யுடுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய் (27)

<u>எளிய உரை :</u> நல் வழிக்கு வராதவர்களை வெல்லுகின்ற சிறப்புகளை உடைய கோவிந்தா! உன்னைப் பாடி அருளைப் பெறுவோம். உன்னிடமிருந்து நாங்கள் பெறும் சன்மானப் பொருள் என்ன தெரியுமா? நாட்டு மக்கள் வியக்கும் வளையல்கள் (சூடகம்) தோள்களில் அணியும் தோள்வளை, காதில் அணியும் தோடுகள் மற்றும் பூக்கள், பெண்கள் கால்களில் அணியும் அணிகலன்கள் மற்றும் இவை போன்ற பல அணிகலன்கள். இவற்றை நாங்கள் அணிவோம். நீ எங்களுக்குத் தரும் ஆடைகளை உடுத்திக் கொள்வோம். அதன் பிறகு நெய்யில் முழ்கடிக்கப் பட்ட பால் சோறு உண்போம். அளவுக்கு அதிகமான நெய் ஊற்றப்பட்ட பால் சோறு கைகளால் எடுத்து உண்ணும் போது அந்தச் சோற்றில் உள்ள நெய் எங்கள் முழங்கைகளின் வழியாக வழிந்து வரும். உன்னிடமிருந்து இத்தனைச் சிறப்புகள் பெற்ற நாங்கள் கொண்டாடும் பாவை நோன்பில் நீயும் கலந்து கொண்டு உள்ளம் குளிர்வாயாக.

இப்பாடலில் நெய்யில் முழ்கடிக்கப்பட்ட பால் சோறு உண்போம். பல விதமான அணிகலன்களை அணிவோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவை முன்னுக்குப் பின் முரணாக உள்ளன என்று சிலர் நினைக்கலாம். அது சரியல்ல. இவை இவை செய்யமாட்டோம் என்று கூறியது பாவை நோன்பு நோற்கும் காலத்தில், இவை இவை செய்வோம் என்று குறிப்பிட்டது பாவை நோன்பின் முடிவில் என்று பொருள் கொள்ள வேண்டும்.

கறவைகள் பின்சென்று கானம்சேர்ந் துண்போம்
அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்து உன்தன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா! உன்தன்னோடு





உறவேல் நமக்குஇங்கு ஒழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்
சிறுபே ரழைத்தனவும் சீறி யருளாதே
இறைவா! நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய் (28)

<u>எளிய உரை :</u> குறைபாடுகள் எதுவும் இல்லா கோவிந்தா! இடையர்க் குலத்தில் பிறந்த நாங்கள் பால் பசுக்களை மேய்ப்பதற்காக அவற்றின் பின்னால் காடு நோக்கிச் செல்வோம். உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்றும் வேறுபாடு இல்லாமல் எல்லோரும் சேர்த்து உண்போம். கொஞ்சம் கூடக் கள்ளமில்லாத ஆயர்குலத்தில் வந்து நீ பிறந்தாய். அதற்காக நாங்கள் புண்ணியம் செய்து உள்ளோம். இறைவனே! உனக்கும் எங்களுக்கும் உள்ள நட்பு யாராலும் பிரிக்க முடியாதது. நாங்கள் ஏதும் அறியாத பிள்ளைகள். உன்மேல் கொண்ட அன்பின் காரணமாகத்தான் உன்னை பெயர்சொல்லி அழைத்துவிட்டோம். இதற்காக எங்கள் மேல் கோபத்தைக் காட்டாமல் உனது அருளைத் தருவாயாக. (கோவிந்தன் – பசுக்களைக் காப்பவன்.)

சிற்றஞ் சிறுகாலே வந்துஉன்னைச் சேவித்து உன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம்மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா
இற்றைக்கும் எழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய் (29)

<u>எளிய உரை :</u> கோவிந்தா! இந்த இளங்காலை நேரத்தில் உன்னைத் தேடி வந்து உனது பொற்றாமரை மலர்களைப் போன்ற திருவடிகளை வணங்குவதன் காரணத்தைச் சொல்லுகிறோம் கேட்பாயாக. பசுக்களை மேய்த்து அவற்றால் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு எளிய வாழ்க்கையை நடத்துகிறோம் நாங்கள். நீ எங்களின் குலத்தில்வந்து பிறந்து விட்டாய். அப்ப இருக்கும்போது உனக்கு நாங்கள் செய்யும் சிறிய பணிவிடைகளை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கக் கூடாது. இன்று நாங்கள் ஒன்றாக

... நீ அருள் செய்யும் மோட்ச உலகை விரும்பி அல்ல. ஏழு ஏழு பிறவிகளிலும் என்றைக்கும் உன்னுடன் நட்பு கொண்டு உனது அருகில் இருந்து உனக்கே நாங்கள் தொண்டு செய்ய விரும்புகிறோம். எங்கள் மனங்களில் இருக்கும் தீய எண்ணங்களை நீக்கி அருள் செய்வாயாக.

வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்டவாற்றை அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற்று இன்புறுவ ரெம்பாவாய் (30)

<u>எளிய உரை :</u> தேவர்களுக்காக அமிர்தம் எடுக்கும் பொருட்டு அலை வீசுகின்ற கடலைக் கடைந்தவன் கண்ணன். கேசி என்னும் அசுரக் குதிரையைக் கொன்றதால் அவனுக்குக் கேசவன் என்னும் பெயரும் உண்டு. அவனை நிலவைப் போன்ற முகமுடைய பெண்கள் போய் வணங்கி அங்கு அவனது அருளைப் பெற்றார்கள். இவ்வாறு பசுமையான தாமரை மலர் மாலைகள் தொடுக்கும் (பட்டர்பிரான்) பெரியாழ்வாரின் கோதையாகிய ஆண்டாள் சங்கத் தமிழால் ஆகிய முப்பது பாடல்களில் கூறினாள். இந்த முப்பது பாசுரங்களையும் தவறாமல் ஓதுபவர்கள் நான்கு தோள்களையும் சிவந்த கண்களையும் அழகான முகத்தையும் உடைய திருமாலின் அருள் பெற்று என்றும் மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள்.

வங்கம் – அலை, கப்பல், பறை – அருள், பறை என்பதை சிலர் இசைக்கருவி என்று பொருள் கொள்வது பொருத்தமாக இல்லை. கண்ணனிடம் இருந்து ஓர் இசைக்கருவியைப் பெற இவ்வளவு நோன்பு இருக்க வேண்டிய அவசியம் இல்லை அல்லவா.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

வாகாது வாவிட
வான் இன்சுதை மேலான வாயித

தோர ணஞ்செறி தார்வாழை யேய்தொடை
மீதில் நின்றிடை நூல்போலு லாவியெ
தோகை யென்றிட வாகாக வூரன — ழமுதூறத்

தோத கந்தலை மாமாயை யேவடி
வாக நின்றதெ னாஆய வோர்வது
தோணி டும்படி நாயேனுள் நீயருள் — நடைமானார்

தருவாயே

கார ணந்தனை யோராறி சாசுரர்
தாம டங்கலு மீறஞ்ச வானவர்
காவ லிந்திர னாடாள வேயயில் — விடும்வீரா

கார்வி டந்தனை யூணாக வானவர்
வாழ்த ரும்படி மேனாளி லேமிசை
காள கண்டம காதேவ னார்தரு — முருகோனே

ஆர ணன்றனை வாதாடி யோருரை
ஓது கின்றென வாராதெ னாவவ
னாண வங்கெட வேகாவ லாமதி — விடும்வேலா

ஆத வன்கதி ரோவாது லாவிய
கோபு ரங்கிளர் மாமாது மேவிய
ஆவி னன்குடி யோனேசு ராதிபர் — பெருமாளே.

107

மூல மந்திர மோத லிங்கிலை
யீவ திங்கிலை நேய மிங்கிலை
மோன மிங்கிலை ஞான மிங்கிலை — மடவார்கள்

மோக முண்டதி தாக முண்டப
சார முண்டப ராத முண்டிடு
மூக னென்றொரு பேரு முண்டருள் — பயிலாத

கோல முங்குண வீன துன்பர்கள்
வார்மை யும்பல வாகி வெந்தெழு
கோர கும்பியி லேவி ழுந்திட — நினைவாகிக்

கூடு கொண்டுழல் வேனை யன்பொடு
ஞான நெஞ்சினர் பாலி ணங்கிடு
கூர்மை தந்தினி யாள வந்தருள் — புரிவாயே

# சுத்த சன்மார்க்க வேண்டுகோள்

❑

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாநா னன்புசெயல் வேண்டும்
எப்பாரு மெப்பதமு மெங்கணுநான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேற் சுத்தசிவ மார்க்கந்
திகழ்ந்தோங்க அருட்ஜோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினு நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே.

ஐயாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அடிமுடிகண் டெந்நாளு மனுபவித்தல் வேண்டும்
பொய்யாத வாய்மைகளே புகன்றிடுதல் வேண்டும்
புகன்றபடி புகன்றபடி புரிந்திடுதல் வேண்டும்
எய்யாத அருட்ஜோதி யென்கையுறல் வேண்டும்
இறந்தவுயிர் தமைமீட்டு மெழுப்பியிடல் வேண்டும்
நையாத வண்ணமுயிர் காத்திடுதல் வேண்டும்
நாயகநின் றனைப்பிரியா துறுதலும்வேண் டுவனே.

அண்ணாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அழியாத தனிவடிவம் யானடைதல் வேண்டும்
கண்ணார நினையெங்குங் கண்டுவத்தல் வேண்டும்
காணாத காட்சியெலாங் கண்டுகொளல் வேண்டும்
பண்ணார நின்றனையே பாடியுறல் வேண்டும்
பரமானந் தப்பெருங்கூத் தாடியிடல் வேண்டும்
உண்ணாடி யுயிர்களுறுந் துயர் தவிர்த்தல் வேண்டும்
உனைப்பிரியா துறுகின்ற வுறவதுவேண் டுவனே.

அத்தாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அருட்பெருஞ்ஜோதி தியைப்பெற்றே யகங்களித்தல்
செத்தாரை மீட்டுமிங்கே யெழுப்பியிடல் வேண்டும்
திருச்சபைக்கே யடிமைகளாய் செய்வித்தல் வேண்டு
ஒத்தாரு முயர்ந்தாருந் தாழ்ந்தாரு மெவரும்
ஒருமையுள ராகியுல கியல்நடத்தல் வேண்டும்
எத்தாலு மழியாத வடிவதிலே நானும்
எந்தாயு மொன்றாக வினிதுறல்வேண் டுவனே.

அரைசேநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அருட்பெருஞ்ஜோ தியைப்பெற்றே அகமகிழ்தல்
வரைசேரெவ் வுலகமுமோ ரொழுக்கமுறல் வேண்டும்
மடிந்தாரை மீளவுநான் வருவித்தல் வேண்டும்
புரைசேருங் கொலைநெறியும் புலைநெறியுஞ் சிறிதும்
பொருந்தாம லெவ்வுயிரும் புரிந்துவத்தல் வேண்
உரைசேர்மெய்த் திருவடிவி லெந்தாயு நானும்
ஒன்றாகி யெஞ்ஞான்று மோங்குதல்வேண் டு

அடிகேள்நான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்
அண்டமெலாம் பிண்டமெலாம் கண்டுகொள
துடிசேரெவ் வுலகமுமெத் தேவருமெவ் வுயிரும்
சுத்தசிவ சன்மார்க்கம் பெற்றிடுதல் வேண்டு
படிவானும் படைத்தன்முத லைந்தொழிலும் ஞான
படைத்தல்முத லைந்தொழிலும் நான்புரித
ஒடியாத திருவடிவி லெந்தாயு நானும்
ஒன்றாகி யெஞ்ஞான்று மோங்குதல்வேண்

அம்மாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வே
ஆணவமா தியமுழுது மறுத்துநிற்றல் வே
இம்மாலைத் தத்துவங்க ளெல்லாமென் வசத்
இயங்கியொரு தீமையுமில் லாதிருத்தல்
எம்மானான் வேண்டுதல்வேண் டாமையுறல்
ஏகசிவ போகமனு போகமுறல் வேண்
தம்மானத் திருவடிவ லெந்தாயு நானும்
சார்ந்துகலந் தோங்குகின்ற தன்மைய

எண்சீரடி ஆசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாநா னன்புசெயல் வேண்டும்
எப்பாரு மெப்பதமு மெங்கணுநான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேற் சுத்தசிவ மார்க்கந்
திகழ்ந்தோங்க அருட்ஜோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினு நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே.

ஐயாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அடிமுடிகண் டெந்நாளு மனுபவித்தல் வேண்டும்
பொய்யாத வாய்மைகளே புகன்றிடுதல் வேண்டும்
புகன்றபடி புகன்றபடி புரிந்திடுதல் வேண்டும்
எய்யாத அருட்ஜோதி யென்கையுறல் வேண்டும்
இறந்தவுயிர் தமைமீட்டு மெழுப்பியிடல் வேண்டும்
நையாத வண்ணமுயிர் காத்திடுதல் வேண்டும்
நாயகநின் றனைப்பிரியா துறுதலும்வேண் டுவனே.

அண்ணாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அழியாத தனிவடிவம் யானடைதல் வேண்டும்
கண்ணார நினையெங்குங் கண்டுவத்தல் வேண்டும்
காணாத காட்சியெலாங் கண்டுகொளல் வேண்டும்
பண்ணார நின்றனையே பாடியுறல் வேண்டும்
பரமானந் தப்பெருங்கூத் தாடியிடல் வேண்டும்
உண்ணாடி யுயிர்களுறுந் துயர் தவிர்த்தல் வேண்டும்
உனைப்பிரியா துறுகின்ற வுறவதுவேண் டுவனே.